# லொஹானுக்கு ஒரு நீதி
# சாமானியனுக்கு ஒரு நீதி













**ஐக்கிய தேசிய வர்த்தக சங்கம் நேற்று சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி கோட்டை ரயில் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியபோது, எந்தவித தயவு தாட்சண்யமுமின்றி பொலிஸ் அதிகாரிகள் அச்சங்கத்தின் ஒருங்கிணைப்பாளரை பலவந்தமாக கைதுசெய்தனர். தமிழ் அரசியல் கைதிகள் மீது அச்சுறுத்தல் விடுத்த இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மீது எந்த நடவடிக்கைகளையும் எடுக்காத பொலிஸ், சாதாரண பிரஜையொருவரை இப்படி கைதுசெய்வது நியாயமா என்றே கேட்கத் தோன்றுகிறது.**

*(படப்பிடிப்பு - பிரதீப் தம்பரகே)*


Follow us

# தமிழன்

THAMILAN தமிலன்


தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்


மலர் : 02, இதழ் : 330 பிலவ வருடம், புரட்டாசி மாதம் 04ஆம் திகதி திங்கட்கிழமை (20.09.2021) ஹிஜ்ரி - 1443, ஸபர் பிறை - 12, 0115886187 - பக்கங்கள் 08

'தமிழன்' மின்னிதழ் பதிப்பு e-Paper


## நக்கல் நமசிவாயம்

**இனி மருந்துகள் வாங்க போகோணுமெண்டா, ரோட்டில நிக்குற பொலிசாரிட்ட, சாராயம் வாங்கப்போறதா சொல்லிப்போட்டு தான் போகோணும் போல..**





Caution: External Email
This email originated from outside of the organization. Do not click links or open attachments unless you recognize the sender and know the content is safe. Contact IT Help Desk if in doubt.

السلام عليكم

we will blast Bandaranaike International Airport on 20 sep 2021

serial bomb blast will be happen soon in srilanka including government buildings.

Release our 4 ppl from you have few days left

Here [1] is our ppl details including passport and other information.

Complete details can be found here [1]

Take our msg seriously..............

Insha-allah

# இலங்கையில் தாக்குதல் தொடர்பான மின்னஞ்சல்!

## பாதுகாப்புத்துறை தீவிர விசாரணை

- ★ நான்குபேரை விடுதலை செய்ய முன்வைக்கப்பட்ட கோரிக்கை குறித்தும் ஆய்வு
- ★ அரச கட்டிடங்கள் உட்பட்ட இடங்களில் விரைவில் தாக்குதலென ஈமெயிலில் தகவல்
- ★ பெருமளவு பணத்தை கப்பமாக பெற ஹெக்கர்களின் வேலையாவென சந்தேகம்

*•விசேட செய்தியாளர்*

இலங்கையின் பிரதானமான விமான நிலையமான கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தினை குண்டுவைத்து வெடிக்கச் செய்யப்போவதாக மின்னஞ்சல் மூலமாக வெளிவந்த தகவல்கள் குறித்து தீவிர விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நான்குபேரை விடுதலை செய்ய இந்த மின்னஞ்சலில் நிபந்தனை முன்வைக்கப்பட்ட அதேசமயம் அரச கட்டிடங்கள் உட்பட்ட இடங்களில் விரைவில் தாக்கு தல் நடத்தப்படுமென ஈமெயிலில் சொல்லப்பட்டிருந்தது.

ஆனால் இதுகுறித்து நடத்தப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளில் இது,....

02≫

## ஜனாதிபதி, பிரதமரின் பொறுப்புகள் பெசிலிடம்

*•யோ.தர்மராஜ்*



ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகிய இருவரும் நாட்டில் இல்லாத போது முழுப் பொறுப்புகளும் நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக துறைமுக அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வெளிநாட்டுக்கு செல்வதற்கு முன்னர் நிதியமைச்சர் மற்றும் அமைச்சரவையின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளுமாறு கூறியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, நிதியமைச்சர் உள்ளிட்ட அமைச்சரவையினால் நாட்டின் ஆட்சி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## லொஹான் ரத்வத்தையிடம் வாக்குமூலம் பெற்ற சி.ஐ.டி

வெலிக்கடை மற்றும் அநுராதபுர சிறைச்சாலைகளில் நடந்த சம்பவங்கள் குறித்து குற்றப்புலனாய்வுத்துறை (சி.ஐ.டி) இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவிடம் வாக்குமூலம் பதிவுசெய்துள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

சி.சி.ரி.வி காட்சிகள் மற்றும் சம்பவங்களை நேரில் பார்த்த சிறை அதிகாரிகள் மற்றும் கைதிகளின் அறிக்கைகள் உள்ளிட்ட ஆதாரங்களை சி.ஐ.டி சேகரித்து வருவதாக அவர் கூறினார்.

"நியாயமான விசாரணை நடத்தப்படுவதையும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதையும் நாங்கள் உறுதிசெய்வோம்" என்று அவர் உறுதியளித்தார்.

02≫

## நியூயோர்க் சென்றடைந்தார் ஜனாதிபதி



ஐக்கிய நாடுகள் சபையின் 76ஆவது பொதுச் சபைக் கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக, அமெரிக்கா சென்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நியூயோர்க் நகரை அடைந்தார்.

அந்நாட்டு நேரப்படி, 18ஆம் திகதி பி.ப 2.30 மணியளவில், நியூயோர்க் ஜோன் எவ் கென்னடி சர்வதேச விமான நிலையத்தை அடைந்த ஜனாதிபதி உள்ளிட்ட தூதுக் குழுவினரை, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி மொஹான் பீரிஸ் வரவேற்றார்.

02≫

## கொரோனா பரவல் குறையவில்லை; எதிர்காலத்தில் சடுதியாக கூடலாம்!

*•யோ.தர்மராஜ்*

நாட்டில் முன்னெடுக்கப்படும் பி.சி.ஆர் மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகளின் எண் ணிக்கை கணிசமாக குறைந்துள்ள நிலைமையில், கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை குறையும் என்று எதிர்ப்பார்க்கப்படுவதால் ஆரம்பத்தைப் போன்று கொவிட் தொற்று பரவுவது வெகுவாக குறைந்துவிட்டது என்று மக்கள் தவறாக புரிந்துகொண்டு சுதந்திரமாக நடமாடுவதற்கு முயற்சிக்கும்போது கடந்த ஏப்ரல் மாதத்தில் கொரோனா தொற்று வேகமாக பரவியதைப் போன்று எதிர்காலத்திலும் வேகமாக அதிகரிக்கும் ஆபத்துள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் மன்றம் தெரிவித்துள்ளது.

நாட்டின் கொரோனா தொற்று நிலைமை குறித்து நேற்று (19) ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளது.

02≫

## இலங்கை மீதான ஜப்பானின் பயணத்தடை இன்றுமுதல் நீக்கம்

டெல்ட்டா வகை திரிபு வைரஸ் தொற்றுப் பரவல் அபாயம் காரணமாக இலங்கை உள்ளிட்ட நாடுகள் மீது விதிக்கப்பட்டிருந்த பயணத்தடையை நீக்க ஜப்பான் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, இன்று (20) முதல் இலங்கை, இந்தியா, மாலைத்தீவு, நேபாளம், பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து வருபவர்களுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்படுவதாக ஜப்பான் அரசு அறிவித்துள்ளது.

டெல்ட்டா கொவிட் திரிபு அவதானத்தை கருத்திற்கொண்டு கடந்த ஜூன் மாதம் ஜப்பானிய அரசால் இவ்வாறு தடை விதிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட நாடுகளிலிருந்து வருபவர்கள் விமான நிலையத்தில் கொவிட் பரிசோதனைக்கு மேலதிகமாக மூன்று நாள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று ஜப்பானிய அரசாங்கம் அறிவித்துள்ளது. கொவிட் தொற்று நோய்க்கான சிவப்பு பட்டியலில் இருந்து...

02≫

## பதவி விலகும் நுகர்வோர் அதிகார சபை பணிப்பாளர்


### சுயாதீனமாக பணியாற்ற முடியவில்லை எனத் தெரிவிப்பு

அரசியல் அழுத்தங்கள் காரணமாக கடமையை சுயாதீனமாகச் செய்ய முடியாததால் தாம் பதவி விலகவுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் துஷான் குணவர்தன தெரிவித்துள்ளார்.

தனது இராஜினாமா கடிதத்தை நாளை செவ்வாய்க்கிழமை நுகர்வோர் விவகார இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவன்னவிடம் கையளிக்கவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

தொடர் அரசியல் அழுத்தங்கள் காரணமாக தன்னால் எனது கடமைகளை சுயாதீனமாக செய்ய இயலாத நிலை காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு வெள்ளை பூண்டு கொள்கலன்கள் சட்டவிரோதமாக வெளியேற்றப்பட்டமை உட்பட பல சம்பவங்களின் பின்னணியில் தனக்கு அரசியல் ரீதியான அழுத்தம் கொடுக்கப்பட்டது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.





*பார்லிமென்ட் எம்.பிக்கள் பலர் அடிக்கடி டுபாய் செல்வது வழக்கமாகியிருக்கிறது.*

*சுற்றுலா பயணிகளுக்கு டுபாய் இடமளித்திருக்கும் அதேசமயம் இந்த எம்.பிக்கள் அங்கு பயணம் செய்வது சுற்றுலாவுக்காக மாத்திரம் அல்லவென சொல்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.*


*இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் , பைசல் காசிம் எம்.பி, பிள்ளையான் எம் பி உட்பட்ட இப்படி டுபாய் போன அரசியல்வாதிகள் பட்டாளம் ஏராளம். இதில் மிக முக்கிய விடயம் என்ன தெரியுமா? இப்படி போன பலர் தமது ஆதரவாளர்களையும், மக்களையும் திருப்திப்படுத்த இந்தியா செல்கிறோம், புதுடில்லி மேலிடம் கூப்பிட்டிருக்கிறது என்றெல்லாம் 'கரடி'விட்டு செல்வதுதான்.*

*டுபாய் போய்வரும் அரசியல்வாதிகள் என்ன காரணத்திற்காக போய்வருகிறார்கள் என்பது விரைவில் தெரியவரும். நேரம்வரும்போது அந்த இரகசியமும் சொல்லப்படும்.*



## இலங்கை குறித்த ஐ.நாவின் பொறிமுறையை ஏற்கோம்!

### அரசாங்கம் மீண்டும் திட்டவட்டம்



இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் நிறுவ முயற்சிக்கின்ற தற்காலிகமான பொறிமுறையை ஏற்றுக் கொள்ள முடியாது என இலங்கை மீண்டும் தெரிவித்துள்ளது.

இந்தப் பொறிமுறை ஐ.நா. சாசனத்தின் உயிரோட்டம் மற்றும் ஆவணங்களுக்கு ஏற்ப அமையவில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் குறிப்பிட்டார்.

உள்ளூர் நிறுவனங்கள் தமது ஆணைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான அமைப்புகள் தேவைப் படுகின்றன. இந்த நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் பணிகளை வெளிப்புற அமைப்புக்களால் மாற்றவோ அல்லது கையகப்படுத்தவோ முடியாது எனவும் பீரிஸ் தெரிவித்தார்.

பொதுநலவாய பொதுச் செயலாளர் பட்ரி சியா ஸ்கொட்லாந்துடன் நியூயோர்க்கில் இடம்பெற்ற மெய்நிகர் சந்திப்பொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

02≫

## மன்னாரில் 14 வயது சிறுவன் தூக்கிட்டு மரணித்த சம்பவம்!

### சந்தேகத்தில் 4 பேர் கைது!

மன்னார்- மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலுப்பைக் கடவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கள்ளியடி பகுதியில் வசித்து வந்த வவுனியாவைச் சேர்ந்த 14 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை (17) தூக்கிட்ட சம்பவம் தொடர்பாக சிறுவர்கள் உட்பட 4 பேர் கைதுசெய்யப்பட்டு, எதிர்வரும் வெள்ளிக்கிழமை (24) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார்-மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலுப்பைக் கடவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கள்ளியடி கிராமத்தில் வசித்து வந்த வவுனியாவைச் சேர்ந்த நாகேந்திரன் டிலக்ஸன் (வயது-14) எனும் மாணவன் கடந்த வெள்ளிக்கிழமை...

02≫

# பேர்ள் கப்பல் தீப்பரவல் பின்னணி; உயிரிழந்த கடல்வாழ் உயிரினங்களின்

## மாதிரிகள் வெளிநாட்டு ஆய்வுகூடங்களுக்கு




எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதன் பின்னணியில் உயிரிழந்ததாக சந்தேகிக்கப்படும் கடல்வாழ் உயிரினங்களின் மாதிரிகள், வெளிநாட்டு இரசாயன ஆய்வுகூடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கரையொதுங்கிய கொள்கலன்களிலிருந்த பிளாஸ்டிக் மாதிரிகள், பிரித்தானியாவின் லண்டன் நகரிலுள்ள இரசாயன ஆய்வு கூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் தர்ஷனி லஹந்தபுர தெரிவித்துள்ளார்.

அத்துடன், உயிரினங்களின் உடல் மாதிரிகளையும் இரசாயன பகுப்பாய்விற்கு உட்படுத்துவது தொடர்பில் அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் பரவிய தீயினால் கடலில் வீழ்ந்த கொள்கலன்களின் எண்ணிக்கை, அதன் பாதிப்புகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கப்பலின் உரிமையாளர் நிறுவனத்தினால் நியமிக்கப்பட்ட பொறுப்புக்கூறல் அமைப்பின் ஆய்வுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தர்ஷனி லஹந்தபுர குறிப்பிட்டுள்ளார்.

# பாலமுனை - திராய்க்கேணி கிராம வாசிகசாலை தனிநபர்களால் சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பு



(பாலமுனை நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாலமுனை திராய்க்கேணி கிராமத்தில் அரச காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வாசிகசாலை கட்டடம் தனிபர்கள் ஒரு சிலரால் சட்டவிரோதமாக இடித்து இல்லாமலாக்கப்பட்டுள்ள சம்பவமொன்று கடந்த சில தினங்களுக்கு முன்னர் பாலமுனையில் இடம்பெற்றுள்ளது.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட யுத்த கால சூழ்நிலையின் போது பாலமுனை திராய்க்கேணி கிராமத்திலிருந்த மக்கள் அச்சம் காரணமாக வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றனர். இடம்பெயர்ந்து சென்ற மக்களை மீண்டும் தங்களது சொந்த கிராமத்தில் மீள் குடியேற்றும் திட்டத்தின் கீழ் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அப்போதைய துறைமுகங்கள் கப்பல்துறை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சராக இருந்த மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப்பினால் மீள் குடியேற்றம் செய்யப்பட்டது.

இடம்பெயர்ந்து சென்ற மக்களை மீள் குடியேற்றம் செய்யும்போது பாலமுனை திராய்க்கேணி கிராமத்தில் சந்தை, சிறுவர் பூங்கா, சுகாதார நிலையம், வாசிகசாலை என்பன அரச காணியில் நிர்மாணிக்கப்பட்டன. இவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட வாசிகசாலை கட்டடத்தை அங்குள்ள மக்கள் வாசிகசாலை மற்றும் பொதுத் தேவைகளுக்காக பயன்படுத்தி வந்தனர். இவ்வாறான நிலையில் வாசிகசாலை கட்டடம் தனிநபர்கள் ஒரு சிலரால் உடைக்கப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. எனவே சட்டவிரோதமாக செயற்படும் தனிநபர்களுக்கு எதிராக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

அண்மைக்காலமாக பாலமுனை திராய்க்கேணி கிராமத்தில் உள்ள அரச காணிகள், அரச கட்டடங்கள் போன்றவற்றை தனிநபர்கள் சிலர் சட்டவிரோதமான முறையில் ஆக்கிரமிப்புச் செய்வதற்கு முனைந்து வருவதாகவும் இந்த சட்டவிரோத செயற்பாடுகளை நிறுத்துமாறு கோரியும் வாசிகசாலை கட்டடத்தை தரைமட்டமாக்கி அதற்குரிய காணியை ஆக்கிரமிப்புச் செய்துள்ள நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி கிழக்கு மாகாண ஆளுநர், அம்பாறை மாவட்ட செயலாளர், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர், மற்றும் கிழக்கு மாகாண கணக்காய்வாளர் திணைக்களம் அட்டாளைச்சேனை பிரதேச சபை செயலாளர் ஆகியோருக்கு பாலமுனை ஊர் நலன் விரும்பிகள் சார்பாக கடிதம் அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### இலங்கை மீதான...

இலங்கையை நீக்க பிரிட்டன் சில தினங்களுக்கு தீர்மானித்திருந்தது.

எதிர்வரும் 22ஆம் திகதி முதல் இலங்கையை சிவப்பு பட்டியலில் இருந்து நீக்க பிரிட்டன் முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### லொஹான் ரத்வத்தையிடம்...

இது தொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது வெளிநாட்டு பயணத்திலிருந்து நாடு திரும்பும்வரை காத்திருப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் கூறினார்.

“இந்த வகையான நடவடிக்கை எந்த நாகரிக சமுதாயத்திலும் அனுமதிக்கப்பட முடியாதது. விசாரணைகளுக்குப் பிறகு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்” என்று அவர் கூறினார்.

சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து மட்டும் விலகிய ரத்வத்த, இரத்தினக்கல் மற்றும் ஆபரண இராஜாங்க அமைச்சராக நீடிக்கிறார். அவர் மீது நடவடிக்கை எடுக்க ஆளும் கூட்டணியின் மற்ற அரசியல் கட்சிகள், எதிர்க்கட்சிகள் மற்றும் சிவில் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகிறார்கள்.

நீதித்துறை அமைச்சர் அலி சப்ரி கூறுகையில், அரசாங்கம் முழு பொலிஸ் விசாரணை அறிக்கைக்காக காத்திருக்கிறது என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் கைதிகளை பாதுகாக்கும் குழு ஆகியவை சி.ஐ.டி.யிடம் புகார் அளித்துள்ளன.

செப்டெம்பர் 12 அன்று இரவு அநுராதபுரம் சிறைக்குள் நுழைந்த லொஹான் ரத்வத்தை, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில் எட்டு பேரை அழைத்து அவர்களில் இருவரை துப்பாக்கியை நீட்டி மிரட்டியதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நெல்லியடியைச் சேர்ந்த மதியரசன் சுலக்சன், ஹட்டனை சேர்ந்த கணேசன் தர்ஷன் ஆகியோரே மிரட்டப்பட்டதாக அடையாளம் காணப்பட்டனர்.

### நியூயோர்க் சென்றடைந்தார்...

“கொவிட் 19 வைரஸ் தொற்றுப்பரவலில் இருந்து மீள்வதற்கான நம்பிக்கையின் மூலம் நெகிழ்ச்சியை வளர்த்தல், நிலைத்தன்மையை மீளக் கட்டியெழுப்புதல், பூமியின் தேவைகளுக்கு பதிலளித்தல், மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மறுமலர்ச்சி” என்ற தொனிப்பொருளில், 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று, ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தொடர் ஆரம்பிக்கவுள்ளது.

இதனையொட்டிய வெளிநாட்டு அமைச்சுகள் ரீதியிலான கூட்டத்தொடர், இன்று முற்பகல் ஆரம்பிக்கவுள்ளதோடு, இந்தக் கூட்டத்தொடர்களில் பங்கேற்பதற்காக, அரசத் தலைவர்கள் பலரும் நியூயோர்க் நகரைச் சென்றடைந்து கொண்டிருக்கின்றனர்.

அரசத் தலைவர்கள் மாநாட்டின் இரண்டாவது நாள் முற்பகல் வேளையில், ஜனாதிபதி தனது உரையை ஆற்றவுள்ளார். அத்துடன், 23ஆம் திகதி இடம்பெறவுள்ள உணவுக் கட்டமைப்புக் கூட்டத் தொடரிலும் 24ஆம் திகதி இடம்பெறவுள்ள எரிசக்தி தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடலின் போதும், ஜனாதிபதி தனது கருத்துகளை முன்வைக்கவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, கூட்டத்தொடரில் பங்கேற்றுள்ள அரசத் தலைவர்களுடன், இரு தரப்புக் கலந்துரையாடல்களையும் ஜனாதிபதி மேற்கொள்ளவுள்ளார்.

வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும், ஜனாதிபதியுடன் இந்தக் கூட்டத்தொடரில் பங்கேற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பல்லவ குளம் சுனாமி மீள்குடியேற்ற கிராமத்தில் பாவனைக்கு குடிநீரின்றி மக்கள் அசௌகரியம்

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை குச்சவெளி பிரதேச சபைக் குட்பட்ட பல்லவ குளம் சுனாமி மீள்குடியேற்ற கிராமத்தில் குடிநீர் மற்றும் பாவனைக்கு கூட தண்ணீர் இல்லாமல் அப்பகுதி மக்கள் கஷ்டப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி பேரலையின் காரணமாக இடம்பெயர்ந்து, குச்சவெளி பல்லவ குள பிரதேசத்தில் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் அன்றுதொட்டு இன்றுவரை குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு எட்டவில்லை என விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் பல்லவ குள பிரதேசத்தில் கிணற்றின் மூலம் நீரைப் பெறுவதற்கான ஏற்பாடுகளை செய்தும் பிரதேசத்தில் எவ்விடத்திலும் பாவனைக்கு உகந்த நீர் கிடைக்கவில்லை எனவும் அவ்வாறு கிணற்றின் மூலம் நீர் கிடைத்தால் கிடைக்கும் நீர் உவர் நீராக காணப்படுவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

குச்சவெளி பிரதேச சபையினால் வாரத்திற்கு ஒரு முறை நீர் வழங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ள போதிலும் குடும்பம் ஒன்றிற்கு 100 லீற்றர் நீர் மாத்திரமே பிரதேச சபையினால் வழங்கப்படுவதாகவும் அவ்வாறே விநியோகிக்கப்படும் நீர் சரியான முறையில் வாரந்தோறும் விநியோகிக்கப்படுவதில்லை எனவும் குற்றம் சுமத்துகின்றனர்.



அவ்வாறு விநியோகிக்கப்படும் நீர் குடிப்பதற்கு கூட போதாமல் இருப்பதாகவும் தனியார் ஒருவரினால் விற்பனை செய்யப்படும் நீரினை லீற்றர் ஒன்றுக்கு ஒரு ரூபா வீதம் கொடுத்து கொள்வனவு செய்வதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட பல பிரதேசங்களில் அண்மைக் காலங்களில் குடியேற்றப்பட்ட ஏனைய பிரதேசங்களில் சீரான குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் பல்லவ குள மக்களை அதிகாரிகளோ அரசியல் வாதிகளோ கண்டுகொள்ளாமல் இருப்பது கவலையளிப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே குடிநீர் என்பது அத்தியாவசிய தேவைப்பாடாக இருப்பதனால் பிரதேச சபையினால் விநியோகிக்கப்படும் குடிநீரையாவது உரிய முறையில் விநியோகிக்குமாறும் தொடர்ச்சியாக இவ்வாறான இன்னல்களில் இருந்து விடுபடுவதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் உரிய அதிகாரிகளிடம் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# தடுப்பூசி அட்டையின்றி பொதுமக்கள் பொலிஸ் நிலையத்தினுள் நுழையத் தடை

## காத்தான்குடியில் புதிய நடைமுறை



(மட்டக்களப்பு நிருபர்)

கொவிட் 19 தடுப்பூசி ஏற்றிய அட்டையை வைத்திருப்போர் மாத்திரமே பொலிஸ் நிலையத்தினுள் தேவைகளைப்பெற அனுமதிக்கப்படுவார்கள் என்று காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறி தெரிவித்தார்.

காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் தேவைகளை நிறைவேற்ற, முறைப்பாடுகளைப் பதிவுசெய்ய மற்றும் ஏனைய தேவைகளுக்கு வருபவர்கள் தங்களுக்கு ஏற்றப்பட்ட கொரோனா தடுப்பூசி அட்டையை கையோடு எடுத்து வரவேண்டும். அவ்வாறு தடுப்பூசி அட்டை இல்லாதவர்கள் திருப்பி அனுப்பப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

பொலிஸ் நிலைய நுழைவாயிலில் தடுப்பூசி ஏற்றிய அட்டையை பொலிஸார் பரிசோதித்து வருவதுடன், அட்டையை எடுத்து வராதோர் வீடுகளுக்குச் சென்று அட்டையை எடுத்து வந்து காண்பித்த பின்னரே அனுமதிக்கப்பட்டனர்.

### இலங்கையில்...

விமான நிலைய இணைய கட்டமைப்பை கையகப்படுத்தி பெருமளவு பணத்தை கப்பமாக பெற முயன்ற ஹெக்கர்களின் வேலையாக இருக்குமோ என்ற ஐயம் விசாரணையாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இந்த விடயத்தை சாதாரண விடயமாக கருதாமல், இது குறித்து தீவிர விசாரணைகளை நடத்த பாதுகாப்பு தரப்பு தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பெருமளவானோர் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், சிலரை விடுதலை செய்யுமாறு வந்த மின்னஞ்சல் அதனுடன் தொடர்புபட்டதா என்ற கோணத்திலும் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

### மன்னாரில் 14 வயது...

காலை கள்ளியடி பகுதியில் அரிசி ஆலை ஒன்றுக்கு அரிசி திரிக்கச் சென்ற நிலையில் அங்கு பணம் திருடப்பட்டதாக சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த அரிசி ஆலையின் உரிமையாளரின் மகன் சிறுவனின் நண்பரிடத்தில் கூறிய போது அவர் எடுத்திருந்தால் பணத்தை திரும்பத் தருவதாக கூறியுள்ளனர்.

பின்னர் அரிசி ஆலையின் உரிமையாளரின் மகன் மற்றும் மகனின் நண்பர்கள் சிலர் இணைந்து குறித்த சிறுவனின் வீட்டிற்கு சென்று சிறுவனை தாக்கியதாகவும், சிறுவனின் தாய் தாக்க முயன்றவர்களின் காலில் விழுந்து கதறியதாகவும், இருந்தாலும் சிறுவனை அவர்கள் தொடர்ந்து தாக்கி விட்டு சென்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் வீட்டில் மகனை நித்திரையாக்கி விட்டு தாயார் குளித்து விட்டு வந்த நேரம் குறித்த சிறுவனை தாக்கியவர்கள் மீண்டும் அவர்க ளது வீட்டில் இருந்து திடீர் என செல்வதை அவதானித்து தாயார் ஓடி வந்து பார்த்த போது மகன் தூக்கில் தொங்கிய நிலையில் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட இலுப்பைக்கடவை பொலிஸார் குறித்த மரணம் தொடர்பாக கள்ளியடி பகுதியை சேர்ந்த 16 வயது முதல் 22 வயதுடைய நான்கு பேரை கைது செய்து இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையத்தில் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்த நிலையில் கைது செய்யப்பட்ட குறித்த 4 பேரையும் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை (19) இலுப்பைக்கடவை பொலிஸார் மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த 4 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

### கொரோனா பரவல்...

நாட்டில் கடந்த ஒரு மாதமாக நடைமுறையில் இருந்த தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு பெயரளவில் மட்டுமே அமுல்படுத்தப்பட்டுள்ளது என்பது அடிமட்டத்தில் ஆராயும் போது தெளிவாகிறது.

ஊரடங்கினால் சுமார் 80 -90 வீதமான பயணக்கட்டுப்பாடு எதிர்பார்த்தபடி கடைபிடிக்கப்படவில்லை. மாறாக, மிக குறைந்த அளவிலான பயணக் கட்டுப்பாடே நடைமுறையிலுள்ளது. ஊரடங்கை முறையாக நடைமுறைப்படுத்துவதில் அதிகாரிகள் ஆர்வம் காட்டாதமையினால் கொரோனா தொற்றுப் பரவலை நாங்கள் எதிர்பார்த்தபடி கட்டுப்படுத்த முடியவில்லை.

ஊரடங்கு சட்டம் மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்கப்பட்டாலும், தற்போது நடைமுறையில் உள்ள பயணக் கட்டுப்பாடுகளை கருத்தில் கொள்ளும்போது நாங்கள் எதிர்பார்த்த பிரதிபலனை அடைய முடியாது.

தற்போதைய சூழ்நிலையில், பொதுப் போக்குவரத்து தவிர மற்ற அனைத்து வகையான போக்குவரத்தும் சுதந்திரமாக இயங்குவதோடு, பொது மக்களின் நடமாட்டம் பெரும்பாலும் சுதந்திரமாகவே இடம்பெறுகின்றன. மேலும், அத்தியாவசியமற்ற பொருட்கள் மற்றும் சேவைகளும் தடையின்றி இயங்குகின்றன. இதனை உடனடியாக முடக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போது, முன்னெடுக்கப்படும் பி.சி.ஆர் மற்றும் என்ரிஜன் பரிசோதனைகளின் எண்ணிக்கை கணிசமாக குறைக்கப்பட்டுள்ளது. இதனூடாக, கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை குறையும் என்று எதிர்பார்க்கலாம். எனவே, ஆரம்பத்தைப் போன்று கொவிட் தொற்று பரவுவது வெகுவாக குறைந்துவிட்டது என்று மக்கள் தவறாக புரிந்துகொண்டுள்ளனர். இதனால், மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கு முயற்சிக்கும் போது கடந்த ஏப்ரல் மாதத்தில் கொரோனா தொற்று வேகமாக பரவுவதைப் போன்று எதிர்காலத்தில் கொரோனா தொற்று பரவல் வேகமாக அதிகரிக்கும் ஆபத்துள்ளது.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட தரவு குறித்து மீண்டும் மீண்டும் கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, சில நாட்களுக்குப் பிறகு தினமும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்து சேர்க்கப்படுகிறது. அத்தகைய சூழ்நிலையில், அந்தத் தரவுகளின் அடிப்படையில் கொரோனா தொற்று கட்டுப்பாடு குறித்த முடிவுகளை எடுப்பதில் பாதிப்புகள் ஏற்படும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இலங்கை குறித்த...

பொதுநலவாய நாடுகளுடனான பேச்சுவார்த்தை மற்றும் ஈடுபாட்டிற்கான இலங்கையின் செயலுறுதிப்பாட்டை இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் மீண்டும் உறுதிப்படுத்தினார் என வெளிவிவகார அமைச்சு நேற்று விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

பொதுநலவாய அமைப்பின் ஸ்தாபக உறுப்பினர் என்ற வகையில் இலங்கை முன்னெச்சரிக்கையாகவும், அமைப்பின் மதிப்புகள், கொள்கைகள் மற்றும் குறிக்கோள்களுக்கு இணங்க அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் வெளிநாட்டு அமைச்சர் பீரிஸ் நினைவு கூர்ந்தார்.

பொதுநலவாய நாடுகளுடன் வணிகம், கல்வி, தொழிற்பயிற்சி மற்றும் பருவநிலை மாற்றம் உள்ளிட்ட பல துறைகளிலான ஒத்துழைப்பை இலங்கை மேலும் எதிர்பார்க்கின்றது. சதுப்புநில மறுசீரமைப்பில் வெற்றி பெற்றுள்ள இலங்கை, நீலப்பசுமை சாசனத்தின் தலைமை நாடாக மேலும் உருவெடுத்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

உணவுப் பாதுகாப்பை மையமாகக் கொண்ட விவசாய உற்பத்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகியவற்றில் கவனம் செலுத்தி அண்மையில் காலநிலை மற்றும் பசுமைப் பொருளாதாரம் எனும் முன்முயற்சியை இலங்கை ஆரம்பித்துள்ளது.

தனித்துவமான மற்றும் உற்சாகமூட்டும் வகையில், அனைத்து உறுப்பு நாடுகளும் பொதுவான நோக்கமொன்றை அனுபவிக்கும் பன்முகத்தன்மையின் கலவையே பொதுநலவாயம் ஆகும் என வெளிநாட்டு அமைச்சர் குறிப்பிட்டார். அதன் உறுப்பினர்கள் அனைவரும் பொதுவானதொரு சட்டப் பின்னணியின் நன்மையைக் கொண்டுள்ளனர். எனினும் அபிவிருத்தியின் பல்வேறு வழிகளைப் பின்பற்றினர்.

நல்லிணக்கம் தொடர்பில் நாட்டில் உள்ள உள்ளூர் நிறுவனங்கள் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து பொதுச்செயலாளர் ஸ்கொட்லாந்துக்கு வெளிநாட்டு அமைச்சர் விளக்கினார். இது ஒரு தொடர்ச்சியான செயன்முறையாவதுடன், உள்ளூர் நிறுவனங்கள் தமது ஆணைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான அமைப்புகள் தேவைப்படுகின்றன. இந்த நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் பணிகளை வெளிப்புற அமைப்புகளால் மாற்றவோ அல்லது கையகப்படுத்தவோ முடியாது.

மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் நிறுவ முயற்சிக்கின்ற தற்காலிகமான பொறிமுறை குறித்து குறிப்பிட்ட அவர், அதனை இலங்கையால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், அது ஐ.நா.சாசனத்தின் உயிரோட்டம் மற்றும் ஆவணங்களுக்கு ஏற்ப அமையவில்லை என்றும் குறிப்பிட்டார்.

2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கான தனது விஜயத்தை அன்புடன் நினைவு கூர்ந்த பொதுச்செயலாளர் ஸ்கொட்லாந்து, பொதுநலவாய அமைப்புடன் இலங்கை தொடர்ச்சியாகப் பேணி வந்த நெருக்கமான ஈடுபாட்டைப் பாராட்டினார்.

2019 இல் பொதுநலவாய சட்ட அமைச்சர்கள் மாநாட்டை நடத்தியமைக்காக இலங்கைக்கு நன்றிகளைத் தெரிவித்த அவர், வர்த்தகம், விளையாட்டு, இளைஞர்கள் மற்றும் வன்முறைத் தீவிரவாதத்தை எதிர்த்தல் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலான இலங்கையின் தொடர்ச்சியான ஒத்துழைப்பை பொதுநலவாய அமைப்பு பாராட்டுவதாகத் தெரிவித்தார்.

பொதுநலவாய அமைப்பின் 54 உறுப்பு நாடுகளில் ஒன்றான இலங்கை, 2013 இல் பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டை நடத்தியது என்றுள்ளது.

# இன்றைய ராசி பலன்

**நாள்: 20.09.2021 திங்கட்கிழமை – புரட்டாசி 5**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**நட்சத்திரம்: பூரட்டாதி**
அ.கா 3.28 - 21.09.2021
அதிகாலை 4.02 வரை

**கண்டம்**
மாலை 3.22- 21.09.2021
பிற்பகல் 2.24 வரை

**முற்கரணம்: பத்திரை**
மாலை 5.24 வரை

**பிற்கரணம்: பவம்**
மாலை5.24- 21.09.2021
அதிகாலை 5.26 வரை

**யோகம்: சூலம்**
மாலை 3.22 வரை

**திதி: பௌர்ணமி**
அ.கா 5.30- 21.09.2021
அதிகாலை 5.26 வரை

**சுப நேரங்கள்**
காலை 6.04 - 7.30
மாலை 4.34 - 6.02

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்**
காலை7.31- 9.02

**குளிகை காலம்**
பிற்பகல் 1.35 - 3.06

**எமகண்ட காலம்**
காலை10.34- பி.ப 12.05

**துர்முகூர்த்தம்**
பிற்பகல் 12.28 - 1.17
பிற்பகல் 2.54- 3.42

லோகநாயகி ஸஹஸ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி

**மேடம்**
மேஷம்: இல்லத்தில் அனைவரின் ஒத்துழைப்பு கிடைக்க பெறலாம். பணியிடங்களில் அதிகாரங்கள் உண்டாகலாம். கடன்களை திரும்ப செலுத்தும் நிலை ஏற்படலாம்.

**ரிஷபம்**
ரிஷபம்: தேக்கமடைந்த வேலைகள் துவங்கும். புதிய வருவாய்க்கான நிலை உண்டாகலாம். பரம்பரை சொத்து பிரச்சினைகள் தீர்க்கப்படும் நிலை உண்டாகலாம்.

**மிதுனம்**
மிதுனம்: மனதில் நேர்மறை எண்ணங்கள் ஆதிக்கம் பெறும். பணிகளில் அதிக உழைப்பு தேவைப்படலாம். மாணவர்களின் கல்வியில் அதிக ஈடுபாடு தேவை.

**கடகம்**
கடகம்: வணிகத்தில் சில பிரச்சினைகள் உண்டாகலாம். வாழ்க்கைத்துணையின் உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். மன அழுத்தம் நீங்க இறைவணக்கம் தேவை. சந்திராஷ்டமம்: ஆயில்யம் நட்சத்திரத்திற்கு இரவு 9.51 வரை

**சிம்மம்**
சிம்மம்: வணிகத்தில் அதிக முயற்சி தேவைப்படலாம். நேர்முக தேர்வுகள் பயனளிக்கும். காதல் உறவின் நிலையில் சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம். சந்திராஷ்டமம்: மகம் நட்சத்திரத்திற்கு இரவு 9.51 - 21.09.2021 இரவு 10.47 வரை

**கன்னி**
கன்னி: காதல் திருமணங்களுக்கு அங்கீகாரம் கிடைக்க பெறலாம். தொழில் தேவைக்கான கடன்கள் ஏற்படலாம். வேலைத்தளங்களில் பிரச்சினைகள் நீங்கும்.

**துலாம்**
துலாம்: பிள்ளைகளுக்கு புதிய உயர் நிலை கல்வியை ஏற்படுத்தும் நிலை உண்டாகலாம். பணிகளில் உயர்பதவி ஏற்படலாம். வாழ்க்கைத்துணையிடம் உங்களைப் பற்றிய எண்ணங்களில் மதிப்பு அதிகரிக்கலாம்.

**விருச்சிகம்**
விருச்சிகம்: வணிகத்தில் புதிய முயற்சியும், சில ஒப்பந்தங்களில் லாபங்களும் உண்டாகலாம். லாபங்கள் புதிய முதலீடாக மாறலாம். பேசும் சொற்களில் கவனம் தேவைப்படலாம்.

**தனுசு**
தனுசு: தரகு வர்த்தகம் லாபம் தரும். பிள்ளைகளின் திருமண சுபங்கள் ஏற்படலாம். உடல்நலத்தில் நோய் எதிர்ப்பு சக்தியால் நன்மை கிடைக்கலாம்.

**மகரம்**
மகரம்: வாழ்க்கை தரமும், வளங்களும் அதிகரிக்கும். பணியிடங்களில் நிர்வாகத்தால் நன்மை கிடைக்க பெறலாம். புதிய வேலைகளும் ஏற்படலாம்.

**கும்பம்**
கும்பம்: வேலைத்தளங்களில் பணிகள் சிறப்புறும். வெளிநாட்டு பயணம் உருவாகலாம். சிறிய மருத்துவ செலவுகள் ஏற்படலாம். பிள்ளைகளின் ஒத்துழைப்பு மகிழ்ச்சி தரும்.

**மீனம்**
மீனம்: ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட வேலைகளில் உள்ளோர் நன்மை பெறலாம். சில பழைய பிரச்சினைகள் தீர இறையருள் தேவைப்படலாம். சிலரின் மீது இருக்கும் நம்பிக்கைகளிலும் கவனம் தேவைப்படலாம்.

## கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 502,758 | 71,722 | 431,026 | 1986 | 12,022 |

# மிருதங்க கலைஞர் சதா வேல்மாறன் கொரோனா தொற்றால் உயிரிழப்பு



மிருதங்க வாத்தியக் கலைஞர் சதா வேல்மாறன் கொரோனா தொற்றால் நேற்று முன்தினம் (18) காலமானார். யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வந்த நிலையிலேயே இவர் உயிரிழந்துள்ளார்.

யுத்த காலத்தில் ஒலிப்பதிவாகிய கணிசமான பாடல்கள், பெருமளவான பக்திப்பாடல்களுடன் ஆயிரக்கணக்கான அரங்க நிகழ்வுகளிலும் அவரது அணி இசைமைத்துள்ளது. அதேவேளை, நூற்றுக்கணக்கான மாணவர்களையும் மிருதங்க, தபேலா கலைஞர்களாகவும் உருவாக்கியுள்ளார்.

# நாட்டை வந்தடைந்த 1,20,000 ஸ்புட்னிக் வி தடுப்பூசிகள்

ரஷ்யாவின் உற்பத்தியான ஸ்புட்னிக் - வி தடுப்பூசிகளின் மேலுமொருதொகை நேற்று காலை கட்டுநாயக்க விமாநிலையத்தை வந்தடைந்துள்ளன.

அதற்கமைய, மேலும் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் தடுப்பூசிகள் நாட்டை வந்தடைந்துள்ளன.

ரஷ்யா - மொஸ்கோ நகரிலிருந்து ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் டுபாய்க்கு கொண்டுவரப்பட்ட இந்த தடுப்பூசி தொகை சரக்கு விமானத்தினூடாக இங்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

அதற்கமைய, இந்த துடுப்பூசி தொகை மருந்தக ஒழுங்குப்படுத்தல் கூட்டுத்தாபனத்தின் குளிரூட்டல் லொறிகளினூடாக கொழும் பிலுள்ள மத்திய கலஞ்சியத்துக்கு கொண்டுச்செல்லப்பட்டுள்ளது.

# கடற்படையினரின் சுற்றிவளைப்புகளில் 3700 கிலோ மஞ்சளுடன் இந்திய பிரஜைகள் உட்பட 10 பேர் கைது





மன்னார், சவுத்பார் மற்றும் எருக்கலம்பிட்டி கடற்கரை பிரதேசம் மற்றும் மன்னார் தெற்கு கடற்பரப்பில் கடந்தவாரம் முன்னெடுக்கப்பட்ட தொடர்ச்சியான சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது சட்டவிரோதமாக கடல்மார்க்கமாக நாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த மூவாயிரத்து 704 கிலோவுக்கும் அதிகமான உலர் மஞ்சள் தொகையுடன் இந்திய பிரஜைகள் ஆறு பேர் உள்ளடங்களாக 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது, மன்னார் தெற்கு கடற்பரப்பில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட ரோந்து நடவடிக்கையின்போது குதிரைமலை குடாவை அண்மித்த சர்வதேச கடற்பரப்பை மீறி நாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த 60 பைகளில் பொதியிடப்பட்ட இரண்டாயிரத்து 100 கிலோ உலர் மஞ்சளுடன் இந்தியாவுக்கு சொந்தமான படகுடன் இந்திய பிரஜைகள் ஆறுபேர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடலில் வைத்தே இலங்கைக்குரிய படகுக்கு இந்த மஞ்சள் தொகையை கைமாற்ற இவர்கள் முயற்சித்திருக்கலாம் என கடற்படையினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அதேபோன்று கடந்த வெள்ளிக்கிழமை இரவு மன்னார், சவுத்பார் களப்பு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சந்தேகத்துக்கிடமான டிங்கி படகொன்றை பரிசோதனைக்குட்படுத்தியபோது அந்த படகிலிருந்து 20 பைகளில் பொதியிடப்பட்ட 866 கிலோ 200 கிராம் உலர் மஞ்சள் மற்றும் டிங்கி படகுடன் சந்தேகநபர்கள் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த 16ஆம் திகதி எருக்கலம்பிட்டி கடற்கரை பிரதேசத்தில் கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது எருக்கலம்பிட்டி பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், 22 பைகளில் பொதியிடப்பட்ட 738 கிலோ 700 கிராம் உலர் மஞ்சள் தொகை மீட்கப்பட்டிருந்தது.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது கைதுசெய்யப்பட்ட இந்தியர்கள் ஆறு பேரும் நேற்று சுகாதார விதிமுறைகளை பின்பற்றி இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கடற்படை அறிவித்துள்ளது. சட்டரீதியான நடவடிக்கை எடுக்கும்வரை இந்த சுற்றிவளைப்புகளின்போது கைப்பற்றப்பட்ட மஞ்சள் தொகை கடற்படையினரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளது.

## கணவரை திருகுவளையால் அடித்துக் கொலைசெய்த விவகாரம்;

# போதையில் தாக்கியதால் திருப்பியடித்ததாக பொலிஸாரிடம் மனைவி வாக்குமூலம்

மனைவி தனது கணவனை திருகுவளையால் அடித்துக் கொலை செய்த சம்பவமொன்று யாழ்ப்பாணம், அரியாலை - பூம்புகார் பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் (18) இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதுதொடர்பில் நேற்று காலை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.பீற்றர்போல் நேரடியாக சென்று விசாரணைகளை மேற்கொண்டார். அதன் பின்னர் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த கொலைச் சம்பவத்தில் துரைராசா செல்வக்குமார் (வயது-32) என்ற ஒரு பிள்ளையின் தந்தையொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த அவர், சில வருடங்களின் முன் ஏழாலை மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த 18 வயது பெண்ணை காதல் திருமணம் முடித்தார். தற்போது, பூம்புகாரில் வசித்து வரும் தம்பதிக்கு பெண் குழந்தையொன்றும் உள்ளது.

இராணுவத்தின் மின்னியல், பொறியியல் பிரிவில் சில காலம் பணியாற்றிய அவர் ஒழுங்கீனம் காரணமாக அங்கிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். மது, போதைக்கு அடிமையான இவர், தினமும் தன்னை துன்புறுத்தி வந்ததாக மனைவி தெரிவித்துள்ளார். பல்வேறு தொழில்களை செய்த அவர், இறுதியாக அரியாலையில் மணல் விற்பனை தொழிலில் ஈடுபடுபவர்களிடம் பணியாற்றி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அதற்கமைய, கணவன் தினமும் போதையில் வந்து தன்னுடன் தர்க்கப்பட்டு, தன்னை தாக்குவதாகவும் நேற்று முன்தினமும் வழமை போன்று இரவு போதையில் வந்து தர்க்கப்பட்டு தன்னை தாக்கிய போது, ஆத்திரத்தில கையில் அகப்பட்ட திருகுவளையால் திருப்பி தாக்கியதால் அவர் உயிரிழந்துவிட்டதாக பொலிஸ் விசாரணையில் தெரிவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.




தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2021, செப்டெம்பர் 20ஆம் திகதி, திங்கட்கிழமை

# மக்களின் காணிப்பிரச்சினை குறித்தான கரிசனை தேவை

நாடளாவிய ரீதியில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள இக்காலத்தில் போக்குவரத்து தொடர்பான மட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. ஆகவே, மக்கள் தமது மூல ஆவணங்களை பெற்றுக்கொள்வதில் மட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. அத்துடன் நாட்டிற்கு வெளியே வசிக்கும் மக்கள் ஒரு மாதத்திற்கு குறைந்ததொரு காலத்தில் இவ் ஆவணங்களை சமர்ப்பிப்பது என்பது இயலாத ஒரு விடயமாக கருதப்படுகின்றது. இத் தகவல்களை பெறுவதற்கான நோக்கம் தொடர்பில் ஒரு தெளிவின்மை காணப்படுவது மக்கள் மத்தியில் இவ் செயன்முறை தொடர்பில் ஒரு சந்தேகத்தை எழுப்பியுள்ளதுடன் இராணுவம் மூலம் புதிதாக நில ஆக்கிரமிப்புகள் இடம்பெறுமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இலங்கைக்கு வெளியே வசிக்கும் மக்கள் தமது தகவல்களை எவ்வாறு சமர்ப்பிப்பது என அக்கடிதத்தில் கூறப்படவில்லை. தற்போது யாழ்ப்பாணத்தில் இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் காணப்படும் நிலங்களின் உரிமையாளர்கள் பலர் வெளிநாடுகளில் வசிக்கின்றனர். எனவே மக்கள் தகவல்களை வழங்குவதற்கான கால எல்லை நீடிக்கப்பட வேண்டும். கால அளவு நீடிக்கப்பட்டால் மக்கள் தகவல்களை திரட்ட போதிய காலஅவகாசம் கிடைப்பதுடன் எந்தவொரு குடும்பமும் இந்த செயன்முறையிலிருந்து தவறவிடப்படாமல் இருப்பதும் உறுதி செய்யப்படும்.

உள்ளூர் அரசாங்க அதிகாரிகள், அரசு அதிகாரிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பங்கேற்புடன், இந்த செயல்முறை பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் தேவையான தகவல்களை வழங்குவதற்கு வசதியாகவும் மேலும், வெளிப்படையான மற்றும் ஒத்துழைப்பு செயல்முறையை உருவாக்கவும் வலியுறுத்துவதாக காணி உரிமைக்கான மக்கள் கூட்டணி சுட்டிக்காட்டியுள்ளது.

உண்மையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போர்க்காலங்களில், அதற்குப் பின்னர்கூட சொந்தக் காணிகளுக்கு செல்லமுடியாத நிலையில் மக்கள் இருந்தபோது அதற்கு வேறு உரித்துகள் சொல்லப்பட்ட சம்பவங்களும் உள்ளன. அதேபோல இராணுவத்தின் கட்டுக்குள் இருந்த காணிகளை விடுவிக்க மக்கள் பட்டபாடுகள் கொஞ்ச நஞ்சமல்ல. இன்னமும் வடக்கில் பல காணிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன.

இவ்வாறான நிலைமையில் மேற்படி அமைப்பு விடுத்துள்ள கோரிக்கையினை யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் கவனத்திற்கொள்ள வேண்டும். மக்களின் உரித்து அவர்களுக்கே செல்லவேண்டும்.

இராணுவ பாவனையிலுள்ள தனியார் காணிகள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வது தொடர்பில் மேலதிக வெளிப்படைத்தன்மையுடன் கூடிய செயன்முறையையும் போதிய கால அளவையும் கோரி, யாழ்ப்பாண மாவட்ட செயலரிடம், காணி உரிமைக்கான மக்கள் கூட்டணி என்கிற அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு யாழ்ப்பாண மாவட்ட செயலருக்கு கடிதமொன்றை எழுதியுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தால் முப்படையினர் மற்றும் பொலிஸாரின் பாவனையிலுள்ள தனியார் காணிகள் காரணமாக மீள்குடியமராத குடும்பங்களின் விபரங்களை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக வெளியிடப்பட்ட கடிதம் தொடர்பான கரிசனைகள் அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இராணுவ ஆக்கிரமிப்புகள் காரணமாக நிலத்தை இழந்து இடம்பெயர்ந்துள்ள மக்கள் கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது நிலத்தை மீளப்பெறும் எதிர்பார்ப்புடன் பல அரச அதிகாரிகளிடம் தமது நிலம் தொடர்பான தகவல்களை தொடர்ந்து வழங்கி வந்துள்ளனர். பல வருடங்களாக எவ்வித பிரதிபலனும் இல்லாமல் ஒரு அரசாங்க அலுவலகத்தில் இருந்து வேறு அரசாங்க நிறுவனங்களுக்கு மாறி மாறிச் சென்று, தமது காணி தொடர்பான தகவல்களை ஒப்படைத்த, காணிகளை இழந்த மக்கள் விரக்தியான ஒரு மனநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாகவே இம்முறை தகவல் வழங்குமாறு வெளியிடப்பட்டுள்ள இந்த கடிதமும் போலியான ஒரு வாக்குறுதி என மக்கள் நினைக்கின்றார்கள். அத்துடன், இந்த கடிதத்தில் ஆவணங்களை ஒப்படைப்பதற்கான இறுதி திகதி குறிப்பிடப்படவில்லை. ஆனால், யாழ்ப்பாண மாவட்ட செயலக வலைத்தளத்தில் இறுதித் திகதியாக செப்டெம்பர் 15 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது கடிதம் வெளியிடப்பட்ட திகதியின் அடிப்படையில் பார்க்கும் போது, ஆவணங்களை சமர்ப்பிக்க மக்களுக்கு ஒரு மாத கால அவகாசம் கூட வழங்கப்படவில்லை.

# முஸ்லிம் தீவிரவாதிகள் மீண்டும் தாக்குவார்களென்ற ஆரூடத்தின் பின்னாலுள்ள மிகப்பெரிய திட்டமிடல்!

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் விபரிப்பு

***ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் 21ஆவது நினைவேந்தல் நிகழ்வு, இணையவழி ஊடாக அவரது நினைவு தினமான (16.9.2021) இடம்பெற்றபோது, அதற்கு தலைமை வகித்து கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் ஆற்றிய உரை.***

எமது மறைந்த தலைவருக்கு செய்கின்ற மிகப் பெரிய நன்றிக்கடனாக கட்சியுடைய தற்கால அரசியல் முழுமையாக பரிமாண மாற்றமடைய வேண்டும் என்பதில் எனக்கு எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. இதை என்னுடைய சக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிகத் தெளிவாகப் புரிந்துகொண்டு உள்வாங்க வேண்டும் என வினயமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

சமகால அரசியல் சம்பந்தமாக பெரும் தலைவர் அஷ்ரப்பை மீள்வாசிப்புச் செய்கின்ற போது, அன்னாரின் மறைவின் பின்னர், கட்சியின் உள்ளும் புறமும் நடைபெற்றுவரும் விடயங்கள் குறித்து இன்று பலருக்கும் மத்தியில் நிறைய விசனங்களும், விமர்சனங்களும் இருப்பதை நாம் அனைவரும் உள்வாங்கியே ஆக வேண்டும்.

இன்று இருக்கின்ற நிலைமையில் எம்மைச் சூழ நடந்துக் கொண்டிருக்கின்ற விடயங்களைப் பார்க்கின்ற போது, கடந்த நாட்களில் வெலிக்கடை மற்றும் அநுராதபுரச் சிறைச்சாலைகளுக்குச் சென்று சிறைச்சாலைக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர் செய்திருக்கின்ற அட்டகாசத்தைப் பார்த்தால் மிகவும் பாரதூரமானது. அவ்வாறு இராஜாங்க அமைச்சரொருவர் தமிழ் கைதிகளை எவ்வாறு தலையில் துப்பாக்கியை வைத்து அச்சுறுத்தினார் என்பதைப் பார்த்தபோது, அழுத்தம் கொடுத்து அவரை அந்தப் பதவியிலிருந்து விலக வைத்திருந்தாலும், அதனால் ஏற்பட்டுள்ள அவமானத்திலிருந்து அரசாங்கம் விடுபட முடியாது. இது சாமான்யமானதொரு விடயமல்ல.

இன்று தமிழ்ச் சமூகம் இதற்காக ஆத்திரமடைந்திருக்கின்றது. முஸ்லிம் சமூகமும் இவ்வாறான விடயங்களில் ஆத்திரமடையவே செய்யும். அதில் எனக்கு எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. இந்த ஆட்சியாளர்களோடு ஒன்றித்து பயணிப்பது மிகவும் ஆபத்தானது.

தலைவர் என்கின்ற பேராத்மா எங்களிடத்தில் விட்டுச் சென்றிருக்கின்றதில் ஏதாவதொரு சிறு பாகமாவது எங்களிடத்தில் எஞ்சியிருக்குமாயின், இவ்வாறான ஆட்சியை இனிமேலும் நாங்கள் பார்த்துச் சகித்துக் கொண்டிருப்பது எந்தக் காரணம் கொண்டும் இந்த சமூகம் அங்கீகரிக்கின்ற விடயமாக இல்லை என்பதை எமது சக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் உளம்கொள்ள வேண்டும்.

அடிக்கடி மனச்சாட்சியை பற்றிக் கதைப்பவர்கள், தங்களுடைய பிரதேச பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு இருக்கின்ற சந்தர்ப்பங்களை தாங்கள் இழந்துவிடுவோம் அல்லது வலிந்து வம்புகளுக்குள் மாட்டுகின்ற பலருக்கு இது வாய்ப்பாக போய்விடும் என்று வெறும் நொண்டிச் சாட்டுக்களைச் சொல்லிக்கொண்டு, அபிவிருத்தி மாயையில் அள்ளுண்டு போகின்ற ஓர் அரசியல் சமகாலத்திற்கு ஒவ்வாத விடயம் என்பதை எங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நன்றாகப் புரிந்துக்கொள்ள வேண்டும்.

தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் மற்றும் எம்முடைய பெரும் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் ஆகியோரை நினைவுபடுத்தி பார்க்கின்றபோது, இந்த இரண்டு ஆளுமைகளும் பொதுவான சில தன்மைகளைக் கொண்டிருந்தன. ஆரம்பத்தில் தந்தை செல்வாவுடைய காலத்தில் வன்முறை அரசியல் இல்லாமல் அஹிம்சை அரசியலை அடியொட்டிச் செய்துவந்த அரசியல் ஈற்றிலே வன்முறையின் பால் சென்ற பின்னர் சகோதர தமிழ்ப் பேசும் சமூகங்கள் இரண்டும் அர்த்தமற்று அதற்குள் அள்ளுப்பட்டுக் கொண்ட போது ஏற்பட்ட அவலங்களை நாம் அனைவரும் கண்டிருக்கின்றோம்.

மீண்டுமொரு முறை இந்த இரண்டு சமூகங்களும் ஒன்றித்து பயணிக்கின்ற காலம் நெருங்கி வந்திருப்பதை நான் அண்மைக் காலமாக மிகவும் வலியுறுத்தி வருகின்றேன். ஆனால் இதைப் பற்றி பொதுவெளியில் பேசுவதை சற்று அடக்கி வாசித்துக் கொண்டிருந்தாலும் கூட, என்னுடைய உள்ளுணர்வு இன்று பரவலாக தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் பிராந்திய ரீதியில் இருக்கின்ற உள்ளார்ந்த முரண்பாடுகளை அடிக்கடி தூக்கிப்பிடித்துக் கொண்டு நிற்கக் கூடாது எனக் கூறுகின்றது.

பரஸ்பரம் கலந்துரையாடி, இணக்கப்பாட்டிற்கு வந்து அவற்றிலிருந்து சுமுகமான முறையில் விடுபட்டு, அதற்கப்பால் சென்று நமது இரண்டு சமூகங்களையும் அடித்து, நொறுக்கி, நாசமாக்கி அதற்கு மேலால் பயணிக்க விழைகின்ற மிக மோசமான மேலாதிக்க அணுகுமுறை தற்போது தோற்றமளிப்பதைப் பற்றி ஒன்றாக இருந்து சிந்திக்க வேண்டிய தருணம் வந்திருக்கின்றது.

தந்தை செல்வாவுக்கு பின்னர் தமிழ் அரசியலில் உருவான வன்முறை கலாசாரத்தின் விளைவுகளில் ஒன்றாக, எவ்வாறு உள்ளார்ந்த ரீதியாக முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்காக சகோதர படுகொலைகளை தமிழ்ச் சமூகத்தின் ஆயுதக் குழுக்கள் செய்தனவோ, அதேபோன்று ஆன்மீக அடிப்படையில் முஸ்லிம்களுக்கு உள்ளேயும் ஒருசில முரண்பாடுகள் வன்முறையின் வெளிப்பாடாக வந்தபோது அவற்றைச் சாதாரணமான சலனங்கள் என்றுதான் நாங்கள் நம்பிக் கொண்டிருந்தோம். ஆனால் அதனை மிக இலாவகமாக இந்தப் பேரினவாதம் பயன்படுத்திக் கொண்டது.

எவ்வாறு பேரினவாதம் தமிழர்களுக்கிடையில் இருந்த சகோதர படுகொலைகளைப் பயன்படுத்தி “கோடாரிக் காம்பு”களையும் பாவித்து போராட்டங்களை முன்னெடுத்ததுவோ, அதேபோன்று நடைபெற்றுவிடுமோ என இன்று முஸ்லிம் சமூகத்துக்கிடையிலும் மீண்டும் தடுமாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம் குறித்து இன்று கத்தோலிக்க சமூகம் யதார்த்தத்தைப் புரிந்திருக்கின்றது. பேராயர் உட்பட அந்தச் சமூகம் மிகத் தெளிவாக அதன் பின்னணியில் இடம்பெற்றுள்ள சூழ்ச்சி, சூட்சுமம் என்பன பற்றி வெளிப்படையாகப் பேசத் தலைப்பட்டிருக்கின்றது.

போதாக்குறைக்கு ஆட்சியாளர்கள் மறைக்க நினைப்பதற்கு மேலும் வலுச் சேர்க்கின்ற வகையில், அண்மையில் காவியுடை தரித்த, வழமையாகவே வலிந்துவந்து வம்புக்கிழுக்கின்ற இன்னுமொரு “பிரபலம்” மீண்டும் பேசத் தொடங்கியிருக்கின்றார். மிக விரைவில் இன்னுமொரு தாக்குதல் நடைபெறப் போகின்றது என்றும், முஸ்லிம் தீவிரவாதிகள் வந்து அதைச் செய்ய போகின்றார்கள் என்றும் அந்தப் “பிரபலம்”ஆரூடம் கூறியிருக்கின்றார்.

இந்த ஆரூடத்திற்குப் பின்னால் இருக்கின்ற மிகப் பெரிய திட்டமிடலை மிகச் சரியாக அடையாளம் கண்டு, பேராசிரியர் ராஜன் ஹூல் “EASTER SUNDAY ATTACK AND DEEP STATE “ என ஆங்கிலத்தில் ஒரு நூலை எழுதி இருக்கின்றார். அது ஒரு முக்கியமான நூல். அதனை அனைவரும் வாசிக்க வேண்டும். அதில் தெளிவாக பல விடயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதன்படி நாட்டின் உளவுத்துறை எவ்வாறு செயற்படுகின்றது. சில விடயங்கள் திரைமறைவில் அரங்கேற்றப்பட்டு இருக்கின்றன என்பதை பற்றிய சந்தேகங்கள் பலமாக மேலெழுந்திருக்கின்ற சூழ்நிலையில் தான் புதிதாகவும் இவ்வாறான சில ஆரூடங்கள் வெளிவருகின்றன.




எனவே, மிக விரைவில் மீண்டுமொரு கலவரத்திற்கு வழிகோலுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. இன்றைய பொருளாதார சிக்கல்களிலும் இந்த மோசமான சுகாதார சூழலிலும் வேறு வழி தெரியாமல் மீண்டுமொரு முறை முஸ்லிம்களை வன்முறையாளர்களாக எடுத்துக் காட்டி நாடகமொன்றை அரங்கேற்றுவதற்கு தயாராகி வருகின்றதை போன்ற அச்சம் அனைவரையும் ஆட்கொண்டிருக்கின்றது.

விரைவில் என்னுடைய சக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்கவுள்ளேன். ஆளுங்கட்சிக்கு இன்று சாமரம் வீசிக் கொண்டிருக்கின்ற எம்மவர் உட்பட ஏனையவர்களையும் சேர்த்து எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து பேசி, அண்மைய காலமாக நாங்கள் எதிர்நோக்கிவரும் எங்களுடைய பாரம்பரிய சட்டங்களான விவாக மற்றும் விவாகரத்து சட்டம், தனியார் சட்டங்கள் போன்றவற்றில் இஸ்லாத்தின் அடிப்படை சட்ட வரையறைகளைப் பேணி, அவற்றின் நடைமுறைகளில் சேர்க்க வேண்டிய சீர்த்திருத்தங்கள் பற்றி எமது சமயத் தலைமைகளுடனும் துறைசார் சட்ட வல்லுனர்களுடனும் சமூக செயற்பாட்டாளர்களுடனும் கலந்துரையாடி நாங்கள் உடன்பாடு கண்ட விடயங்கள் உள்ளன. அவற்றைச் செயற்படுத்த முன்வர வேண்டும்.

இச்சட்டங்களில் தங்களுக்கு வேண்டிய விதத்தில் மாற்றங்களைச் செய்வதற்கு அல்லது இல்லாமல் செய்வதற்கு மிக மோசமான அழுத்தத்தை தற்போதைய நீதியமைச்சருக்கு மேல் செலுத்திக் கொண்டிருக்கின்ற தீவிரப் போக்கைக் கடைப்பிடிப்பர்களை நாங்கள் வென்றாக வேண்டும். அதற்கு நாங்கள் ஒன்றுபட வேண்டும். ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று இல்லாமல் எல்லோரையும் ஒன்றுபடுத்தி ஓர் அணியாக நின்று, அதற்குத் தலைமை தாங்கி வழிநடத்துவதற்கு தயாராகிக் கொண்டிருக்கின்றேன்.

இந்த சந்தர்ப்பத்தில் இதற்கும் அப்பால் அரசியல் திருத்தங்களை, சட்டங்களை மாற்றி தேர்தல் முறையினூடாக சிறுபான்மை சமூகங்களின் பிரதிநிதித்துவத்தை காவு கொள்கின்ற மிக மோசமான நடவடிக்கைகளுக்கு இன்றைய ஆட்சியாளர்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கான சமிக்ஞைகள் மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்தகைய சிக்கலான நிலைமையில் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதைப் பற்றி, தாங்கள் சோரம் போய்விட்டது பற்றிய எதுவித விவஸ்தையும் இல்லாமல் இன்னும், இன்னும் நொண்டிச் சாட்டுகள் சொல்லிக் கொண்டிருக்காமல், பல்லாயிரக்கணக்கான கட்சி ஆதரவாளர்களும், போராளிகளும் ஆதங்கத்தோடும் ஆத்திரத்தோடும் இந்த விடயங்களைப் பேசிக் கொண்டிருக்கின்ற நிலையில், அவர்களது நிலைப்பாடுகள் நிச்சயமாக இந்த சமூகத்தின் விருப்பத்திற்குரியதல்ல என்பதைப் புரிந்து கொண்டு மறைந்த எமது தலைவருக்கு செய்கின்ற மிகப் பெரிய நன்றியறிதலாக அவர்களுடைய அத்தகைய போக்கில் இருந்து விடுபட வேண்டும்.

ஆணித்தரமாக இந்த சமூகத்தின் அரசியலின் ஆன்மா முஸ்லிம் காங்கிரஸ் என்ற விடயத்தை நாங்கள் எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். எங்கு தவறு விட்டிருக்கின்றோம் என்பதை மீண்டுமொரு முறை திரும்பிப் பார்த்து பழைய தடயங்களை நாங்கள் நாடிச் செல்பவர்களாக மாற வேண்டும். அதுவே தலைவரின் நினைவு நாளில் அவருக்கு செலுத்துகின்ற மாபெரும் நன்றிக்கடனாக இருக்கும்.

ஆருயிர் தலைவரின் வசீகர வதனம் என்றுமே எங்களை விட்டு மறைந்து விடாமல் இன்றும் நிலையாய் நிற்பதற்கு அவருடைய அரசியல் ஆளுமையின் பல்பரிமாண செயற்பாடுகள் காரணமாக இருந்தாலும், அவருடைய மனித நேயம் என்பது எவராலும் மறுதலிக்க முடியாத ஒரு விடயமாகவுள்ளது.

சிவில் சமூக செயற்பாட்டாளராக இருந்து அவர் படிப்படியாக அரசியல்வாதியாகப் பரிணமித்து வந்த சந்தர்ப்பங்களில் வெவ்வேறு கால கட்டங்களில் எவ்வாறு அவருடைய ஆன்மீகம் வெளிப்பட்டுள்ளது என்பது பற்றியும் “நான் எனும் நீ” என்ற நூலில் கூறப்பட்டுள்ளது.

தலைவருடைய சொல்லாண்மை எவ்வளவு வளமானதோ, வசீகரமானதோ அதுபோல அவருடைய ஆன்மீகமும் அலாதியானது, பிரத்தியேகமானது என்று நம்புகின்றவன் நான். இந்த நூலில் இருக்கின்ற கவிதைகளை மீள வாசிக்கின்ற போது இன்னும் வியப்படைகின்றளவுக்கு அதனுடைய அம்சங்கள் பொதிந்திருக்கின்றன.

அந்த நூலின் முன்னுரையில் “ஒரு மனிதனின் வாக்குமூலம்” என்ற தலைப்பில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் யாவும் அவருடைய பரிணாம மாற்றத்தினை ஒழுங்காக காட்டுவதற்காக சித்தரித்த வசனங்களாக உள்ளன. இதில் தலைவருடைய ஆன்மீகத்தை பற்றிய தெளிவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தலைவருடைய அந்திம காலத்தில் ஆசுவாசத்தினால் உந்தப்பட்டு, ஆன்மீகப் பரப்பை புரிந்து கொண்டதுதான் அவருக்கும் சூபித்துவத்திற்கும் ஏற்பட்டிருந்த தொடர்பாடல்.

தலைவரை மீள்வாசிப்புச் செய்கின்ற போது அவருடைய ஆன்மீகத்தைப் பற்றிப் பேசுவது பிழையான விடயமாக கருதப்பட மாட்டாது. 1983ஆம் ஆண்டு இந்த கவிதை தொகுதியை எழுத ஆரம்பித்த போது எழுதியவற்றை இறுதியாக இணைத்துள்ளார். அதில் ஏகத்துவத்தில் ஆழ வேரூன்றி, தனது ஆன்மீகத்தை தொடங்கி காலப்போக்கில் அவருடைய ஆன்மா ஆண்டவனை அடையக் கூடிய விதத்தில் சூபித்துவத்தின் பால் சென்றது பற்றி அவரை அருகிலிருந்து பார்த்த பலரும் தெளிவாக அறிந்து வைத்திருக்கின்றோம்.

தெரிந்த உலமாக்களும் அவரிடத்திலிருந்த தெளிவான சூபித்துவ கோட்பாடுகளை உணர்ந்து வைத்திருந்தார்கள். அது தான் உண்மை.

அதை சார்ந்து “நான் எனும் நீ” என்ற அவரது கவிதை இத்தொகுப்பில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

அதே மாதிரி 1996 முதல் 1999 வரை ஒவ்வோர் ஆண்டும் தன்னுடைய ஆன்மீக பரிணாமத்தில் ஏற்பட்டு வருகின்ற புதிய மாற்றத்தை மிகத் தெளிவான வார்த்தைகளால் மிக அழகானதும் கனதியுமான கருத்துச் செறிவோடும் கவித்துவ வான்மையோடும் அவர் வெளிக்கொண்டு வந்தார்.

அதில் முக்கியமாக “வெள்ளைக் கிழவன்” என்ற கவிதையையும், 1997ஆம் ஆண்டு எழுதப்பட்ட “உன்னை தேடி அழுகின்றேன்” என்ற கவிதையையும் கட்சி தொண்டர்கள், தோழர்கள் மற்றும் அவருடைய ஆன்மீகம் பற்றிய ஆய்வைச் செய்கின்றவர்கள் மீண்டும் வாசிக்க வேண்டுமென நான் நினைக்கின்றேன்.

இன்னொரு கவிதை “விடியாத இரவு” என்ற கவிதை. அதுபோல “நான் இலா நீ” என்ற கவிதை இறுதியாக “நான் எனும் நான்” என்ற கவிதை. அவை ஓர்ஆன்மா ஆண்டவனை நாடுவதற்கு அங்கலாய்க்கின்ற அவஸ்தையை வெளிக்கொண்டு வருகின்ற பாங்கில் சூபித்துவ கொள்கையை அடியொட்டி வரையப்பட்ட கவிதைகள் என்பதில் எனக்கும் இதனை வாசிக்கின்ற எவருக்கும் எதுவித சந்தேகமும் எழாது. எனவே எல்லாம் வல்ல இறைவன் அவருக்குரிய சரியான இடத்தை ஜென்னத்துல் பிர்தௌஸில் வழங்குவான் என்ற நம்பிக்கையோடு, இந்த தலைவரின் பாசறையில் வளர்ந்த நாங்கள் இன்று எங்கு போய்க் கொண்டிருக்கின்றோம் என்பது தொடர்பில் மீளவும் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

தலைவருடைய கவிதைகளில், தன்னுடைய மறைவை எதிர்வு கூறுகின்ற விடயத்தை அவர் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்ற பல கவிதைகள் இருக்கின்றன. எல்லோருக்கும் தெரிந்த, போராளிகள் அனைவரும் இன்றும் விரும்பிப் படிக்கின்ற அவருடைய குரலில் ஒலிப்பதிவு செய்து எங்களுக்கு தந்துவிட்டு சென்றிருக்கின்ற “போராளிகளே புறப்படுங்கள்” என்ற கவிதை முக்கியமானது. அதுபோல் “பிரியாவிடை” என்ற கவிதையில் உள்ள சந்த செயற்பாடுகள், சந்தத்தை எப்படி தன்னுடைய கவிதைகளில் கொண்டு வருகின்றார் என்பது உண்மையில் பிரமாதமாகும்.

கவிதை என்று வருகின்ற போது அதன் மண்வாசனை மாறாமல், தென்கிழக்கின் மண்வாசனையை கிராமத்து பாடல்களினூடாக கொண்டு வருகின்ற லாவண்யம் என்பது மிகவும் மெச்சத்தக்கது. “புதிய வெளிச்சம்” என்ற பாடலாக தலைவருடைய காலத்தில் பாடலாக வெளியாக்கினோம். அதுபோல நாட்டுப்புற பாடலில் “வரம்பிலே வாப்பா மௌத்தானார்” என்ற கவிதை உண்மையில் நாட்டுப்புற மணம் கமழ்கின்ற தென்கிழக்கு சொல்லாடலை அழகாக வர்ணிக்கின்ற வகையில் அமைந்துள்ளது.

இவ் இணையவழி நினைவேந்தல் நிகழ்வில் சென்னையிலிருந்து கவிஞர், நடிகர் வ.ஐ.ச.ஜெயபாலன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.தவம், லண்டனிலிருந்து இலக்கிய, சமூக செயற்பாட்டாளர் எம்.பௌசர், கட்சியின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் அஷ்ரப்பின் சகோதரி சட்டத்தரணி பெரோஸா ஹுஸைன், வைத்திய கலாநிதி தாஸிம் அஹ்மட், முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர், ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர், பிரதிச் செயலாளர் மன்சூர் ஏ.காதிர், கவிஞர் நபீல் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

# பால்மாவை பதுக்கிவைத்து அதிக விலைக்கு விற்பனை; கண்டுபிடிக்கப்பட்டால் கடும் சட்டநடவடிக்கை

## கிழக்கு மாகாண பணிப்பாளர் அன்வர் சதாத் எச்சரிக்கை

(மீராவோடை நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பால்மாக்கள், சீமெந்து உட்பட பல்வேறுபட்ட பொருட்களை வியாபாரிகள் அதிக விலைக்கு விற்பனை செய்வதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளன என்று நுகர்வோர் அதிகார சபையின் கிழக்கு மாகாண பிரதிப் பணிப்பாளரும் மட்டக்களப்பு மாவட்ட பொறுப்பதிகாரியுமான ஆர்.எப்.அன்வர் சதாத் தெரிவித்தார்.



நுகர்வோரின் நலன்கருதி இவ்வாறான வியாபாரிகளை கண்டறிய நாம் கள ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறோம். அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாட்டு விலைகளை மீறி இவ்வாறு கூடுதல் விலைக்கு பொருட்களை விற்பனைசெய்யும் வியாபாரிகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மாவட்டத்தில் சில வியாபாரிகள் பால்மாக்களை பதுக்கிவைத்து அதனை இரவு நேரங்களில் அதிக விலைக்கு விற்பனை செய்வதாகவும் எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

பொருட்களை பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களை 0652228810, 0770110096, 1977 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி எமக்கு தகவல்களை வழங்கமுடியும் என்று ஆர்.எப்.அன்வர் சதாத் நுகர்வோர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

# திருமலை மாவட்டத்தில் எதிர்வரும் 22 – 23 ஆம் திகதிகளில் நீர்வெட்டு

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் எதிர்வரும் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் நீர்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் திருகோணமலை பிராந்திய முகாமையாளர் எஸ்.ஜயந்தன் தெரிவித்தார்.

கந்தளாய்-திருகோணமலை பிரதான நீர்க் குழாயில் ஏற்பட்ட திருத்தவேலை காரணமாக 22ஆம் திகதி முழுமையாக நீர் துண்டிக்கப்படவுள்ளதாகவும், 23ஆம் திகதி மட்டுப்படுத்தப்பட்ட நீர் விநியோகம் இடம்பெறவுள்ளதாகவும் பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார்.

கந்தளாய், தம்பலகாமம், கிண்ணியா, திருகோணமலை மற்றும் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில்



இவ்வாறு நீர் துண்டிப்பு இடம்பெற உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பொதுமக்கள் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு தமக்குத் தேவையான நீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறும் அவர் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# போதைவஸ்து பாவனையால் தந்தையின் கண்ணை விரல்களால் தோண்டிய மகன்

## வாழைச்சேனையில் அகோரம்

(மீராவோடை நிருபர்)

தந்தையின் கண் ஒன்றை அவரது மகன் தனது கை விரல்களால் தோண்டி சிதைவடையச் செய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தியாவட்டவான் பாடசாலை வீதியிலேயே இச் சம்பவம் நேற்று முன்தினம் (18) மாலை இடம்பெற்றுள்ளது.

தந்தைக்கும் மகனுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக 67 வயதுடைய தந்தையை அவரது 19 வயதான மகன் கடுமையான முறையில் தாக்கியதன் பின்னர் கண்ணை தோண்டி சிதைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த அகோரச் செயலுக்கு போதைவஸ்துப் பாவனையே காரணமாக அமைந்துள்ளது என்று பொலிஸாரின் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இவ்வாறு கண் சிதைவடைந்து வெளியில் வந்த நிலையில், வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அந்நபர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

இக் கோரச் செயலைச் செய்த நபரை வாழைச்சேனை பொலிஸார் கைதுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கழுவங்கேணி காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

## மூவர் கைது



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள களுவங்கேணி காட்டுப்பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றை நேற்று (19) அதிகாலை பொலிஸார் முற்றுகையிட்டனர். இதன்போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 3 பேரை கைதுசெய்ததுடன், 50 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பும், 3 இலட்சத்து 20 ஆயிரம் மில்லி லீற்றர் கோடாவும் மீட்கப்பட்டுள்ளதாக மாவட்ட விசேட குற்ற விசாரணைப்பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

பொலிஸ் மாவட்ட விசேட குற்ற விசாரணைப்பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்கவின் ஆலோசனைக்கமைய, மாவட்ட விசேட குற்ற விசாரணைப்பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தலைமையிலான பொலிஸார் நேற்று அதிகாலை 3 மணியளவில் குறித்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டனர்.

இதன்போது 3 பேரை கைதுசெய்ததுடன், 50 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பும், 3 இலட்சத்து 20 ஆயிரம் மில்லி லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்களையும் மீட்டுள்ளனர்.

இதன்போது கைதுசெய்யப்பட்டவர்களை ஏறாவூர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் மோட்டார் குண்டு மீட்பு



(மண்முனை நிருபர்)

மட்டக்களப்பு, ஆயித்தியமலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மகிழவட்டவான் பிரதேசத்தில் தனியார் காணியொன்றில் கைவிடப்பட்ட நிலையில் மோட்டார் குண்டொன்று நேற்று முன்தினம் (18) மீட்கப்பட்டுள்ளதாக ஆயித்தியமலை பொலிஸார் தெரிவித்தனர்.

தனியார் காணியொன்றில் நீர் குழாய் பதிக்கும் நடவடிக்கைக்காக குழி தோண்டும்போது மண்ணிலிருந்து சக்திவாய்ந்த மோட்டார் குண்டு ஒன்று வெளிவந்ததையடுத்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இக்காணியில் கடந்த யுத்தகாலத்தில் பாதுகாப்பு படையினர் முகாம் அமைத்திருந்ததாகவும் தெரிய வருகின்றது.

மேற்படி குண்டை அகற்றும் பொருட்டு குண்டு செயலிழக்கும் படைப்பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டு, தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், மேலதிக விசாரணைகளை ஆயித்தியமலை பொலிஸ் நிலைய விசேட புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# குச்சவெளி கடலுக்குச் சென்ற மீனவர் 09 நாட்களாகியும் வீடு திரும்பவில்லை



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை - குச்சவெளி, ஜாயா நகரைச் சேர்ந்த மீனவர் ஒருவர் அட்டை பிடிப்பதற்காக கடலுக்குச் சென்றவர், எட்டு நாட்களாகியும் காணவில்லை எனக் கூறப்படுகின்றது.

குச்சவெளியிலிருந்து கடந்த திங்கட்கிழமை அட்டைப் பிடிப்பதற்குச் சென்ற 30 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

இவ்வாறு காணாமல் போனவருடன் படகு ஓட்டுநரும் போயுள்ளார்.

அட்டைப் பிடிப்பதற்காக கடலுக்குள் சென்றவர் குறிப்பிட்ட நேரமாகியும் மேலே வராததனால் படகு ஓட்டுநர் அவர் கொண்டு போன கயிற்றை இழுத்துப் பார்த்துள்ளார். அட்டை பை மட்டும் தான் வந்துள்ளது. சுழி ஓடியவரைக் காணவில்லை.

நேற்றுடன் (19) ஒன்பது நாட்கள் கடந்தும் இதுவரையும் அவரைக் காணவில்லை. இது சம்பந்தமாக உறவினர்கள் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். கடற்படையினர் மற்றும் மீனவர்கள் தேடியும் இதுவரை அவர் கிடைக்கவில்லை.

# கிண்ணியாவில் கைவிடப்பட்ட நிலையில் 45 நாள் ஆண் குழந்தையொன்று மீட்பு



(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை - கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமாஜதீவு பகுதியில் ஆண் குழந்தை ஒன்று கைவிடப்பட்ட நிலையில் நேற்று (19) அதிகாலை மீட்கப்பட்டதாக தெரியவருகின்றது.

கிண்ணியா பொலிஸ் நிலையத்திற்கு இராணுவ புலனாய்வுத் துறையினர் வழங்கிய தகவலையடுத்து குறித்த குழந்தை மீட்கப்பட்டுள்ளதாகவும் அக்குழந்தை பிறந்து 45 நாட்களாக இருக்கலாம் எனவும் வைத்தியசாலை தரப்பினர் தெரிவித்தனர்.

கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட குறித்த ஆண் குழந்தையை, தற்பொழுது கிண்ணியா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

# உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையிலான விவாதப் போட்டியில் அக்கரைப்பற்று பிரதேச சபை காலிறுதிக்கு தெரிவு

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் விவாதப் போட்டியில் அக்கரைப்பற்று பிரதேச சபை காலிறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் காணப்படும் தமிழ்ப்பேசும் உள்ளூராட்சி மன்றங்களை ஒன்றிணைத்து ஒவ்வொரு சபைகளுக்கும் ஒரு தலைப்பு என்ற அடிப்படையில் விவாதப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்ப்பேசும் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களின் ஆளுமை மற்றும் அறிவுத்திறனை விருத்திசெய்வதற்காக இந்த போட்டிகள் நடைபெற்று வருகின்றன என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். மேற்படி விவாதப் போட்டியானது இரண்டு சுற்றுகள் நிறைவு பெற்றுள்ள நிலையில், இரண்டு சுற்றுகளிலும் அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.றாஸிக் தலைமையிலான உறுப்பினர்கள் தங்களது விவாத, அறிவுத்திறனை வெளிக்காட்டி வெற்றிபெற்றுள்ளனர்.

நடைபெற்றுவரும் போட்டியில் அம்பாறை மாவட்டம் சார்பில் காலிறுதிப் போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள அக்கரைப்பற்று பிரதேச சபையின் விவாதக் குழுவின் தலைவர் தவிசாளர் எம்.ஏ.றாசிக், உறுப்பினர்களான ரீ.எம் ஐய்யூப், ஏ.ஜி.பர்சாத், நஜீப் சபையின் செயலாளர் எல்.எம்.இர்பான் ஆகியோருக்கு பலரும் தங்கள் பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர். கொவிட் 19 காரணமாக போட்டிகள் யாவும் சூம் தொழில்நுட்ப இணைப்பினூடாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அட்டாளைச்சேனையில் 20 முதல் 30 வயதுக்குட்பட்டோருக்கு கொவிட் தடுப்பூசி



(அட்டாளைச்சேனை நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 20 வயது முதல் 30 வயதிற்குட்பட்டவர்களுக்கு கொவிட் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இன்று (20) காலை 8.00 மணி முதல் நடைபெறவுள்ளதாக அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.அகிலன் நேற்று (19) தெரிவித்தார்.

இந்த தடுப்பூசி ஏற்றும் பணிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை (18) முதல் அட்டாளைச்சேனை அந்-நூர் மகா வித்தியாலயம், ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலயம், அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், அட்டாளைச்சேனை மாவட்ட வைத்தியசாலைகளில் நடைபெற்றன. இதில் 20 வயது தொடக்கம் 30 வயதிற்குட்பட்ட 500 இளைஞர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு முதல் தடவையாக கொவிட் 19 சினோபார்ம் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தீகவாபி வைத்தியசாலை, அட்டாளைச்சேனை அந்-நூர் மகா வித்தியாலயம், அட்டாளைச்சேனை மாவட்ட வைத்தியசாலை, அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், அட்டாளைச்சேனை ஜும்ஆப் பள்ளிவாசல் கலாசார மண்டபம், பாலமுனை மின்ஹாஜ் மகா வித்தியாலயம், ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலயம் ஆகிய மையங்களில் இன்று (20) காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையும் கொவிட் 19 தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

குறிப்பிட்ட காலத்தில் மூவாயிரம் இளைஞர்களுக்கு கொவிட் தடுப்பூசி ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் தவறவிடாது நேரகாலத்தோடு முன்வந்து தத்தமது வதிவிடத்திற்கு அருகிலுள்ள மையங்களுக்குச் சென்று தமக்குரிய தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.அகிலன் கேட்டுக்கொண்டார்.



அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தனிமைப்படுத்தல் ஊரடங்கினை மீறி பிரதான வீதிகளில் தக்க காரணங்கள் இன்றி பயணிப்பவர்களை அடையாளம் கண்டு இவர்களுக்கு அன்ரிஜன் மற்றும் பி.சி.ஆர்.பரிசோதனைகள் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.அகிலன் தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பிரதம பொது சுகாதாரப் பரிசோதகர் ஈ.எல்.சலீம், பொது சுகாதாரப் பரிசோதகர் எம்.எம்.ஜெசீர் உட்பட பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

# திருகோணமலையில் மின்னல் தாக்கியதில் தென்னை மரம் வீழ்ந்து குடியிருப்பு சேதம்

## 06 வயது சிறுமி காயங்களுடன் மருத்துவமனையில்

(திருகோணமலை)

திருகோணமலை கோமரங்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வில்பனா குளம் பகுதியில் மின்னல் தாக்கி வீடொன்று சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன்போது 06 வயது சிறுமி காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை (17) இரவு இடம்பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

மேலும் தொடர்ந்து பெய்துவந்த அடை மழை காரணமாக மின்னல் தாக்கியதில் தென்னை மரம் ஒன்று கூரைமேல் விழுந்ததாகவும் வீடு பகுதியளவில் சேதமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது வீட்டில் இருந்த ஆறு வயது சிறுமியொருவர் சிறு காயங்களுடன், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் ஒருவருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞரொருவர் உயிரிழப்பு!



நீர்வேலி பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இளைஞரொருவர் உயிரிழந் துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் நீர்வேலி சந்திக்கு அருகிலுள்ள ஞான வைரவர் ஆலயத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்திலேயே குறித்த இளைஞர் உயிரிழந்துள்ளார். நீர்வேலி பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய டிலக்ஷன் என்பவரே இவ்வாறு உயிரிழந் துள்ளார்.

குறித்த இளைஞர் மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கி சென்று கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப் பாட்டை இழந்து வீதியோரமாக இருந்த சீமெந்து கட்டுடன் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளது. விபத்துக்குள்ளான நபர் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# யாழில் 20 - 30 வயதுக்குட்பட்டவர்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் நாளை முதல் ஆரம்பம்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் அறிவிப்பு

(யாழ். செய்தியாளர்)

வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் 20 தொடக்கம் 30 வயதுக்குட்பட்ட அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி நாளை முதல் (21) வழங்கப்படுமென வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் விளக்கமளித்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தடுப்பூசி வழங்கும் நிலையங்கள் பற்றிய விவரங்கள் அப்பிரதேசத்திற்குரிய சுகாதார மருத்துவ அதிகாரியினால் வெளியிடப்படும்.



அவ்வாறு அறிவிக்கப்படும் தடுப்பூசி வழங்கும் நிலையங்களில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட தடுப்பூசிகளும் வழங்கப்படும்.

20 தொடக்கம் 30 வயதுக்குட்பட்டவர்கள் அனைவரும் தமது அடையாள அட்டை போன்ற உறுதிப்படுத்தும் ஆவணங்களை சமர்ப்பித்து தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தடுப்பூசி அல்லது வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை உடையவர்களுக்கு யாழ்ப்பாண போதனா மருத்துவனையிலும், தெல்லிப்பளை, பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனைகளிலும் செப்டெம்பர் மாதம் 25ஆம் திகதி மற்றும் ஒக்டோபர் மாதம் 02ஆம் ஆம் திகதி காலை 8.00 மணி முதல் தடுப்பூசி செலுத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறான நிலைமைகள் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள் தமது பிரதேசத் திற்குரிய சுகாதார மருத்துவ அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு மேற்குறிப்பிட்ட மருத்துவமனைகளில் ஏதாவது ஒன்றில் தமக்குரிய தடுப்பூசியை பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

# தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு விசேட கழிவு வவுச்சர் சலுகை

## திலும் அமுனுகம தெரிவிப்பு

(கண்டி நிருபர்)

நாட்டில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளதன் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு விசேட சலுகை கொண்ட கழிவு வவுச்சர்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கண்டியில் நேற்று (19) நடந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது, போக்குவரத்து கட்டுப்பாடுகள் சில தினங்களின் பின் நீக்கப்பட்டு விடும். அதற்கு முன்னர் இதனை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், மேற்படி போக்குவரத்து கட்டுப்பாடு காரணமாக 17ஆயிரம் பஸ்களின் சேவை பாதிப் படைந்துள்ளதாகவும் இதன்படி டயர் டியூப், உதிரிப்பாகங்கள், ஒயில் போன்றவற்றிற்கான கழிவுகளுடனான கொள்வனவு வவுச்சர்கள் வழங்கப்படும். அத்துடன் காப்புறுதி தொடர்பாகவும் சில சலுகை வவுச்சர்கள் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

# மண்கும்பானில் முருங்கைச்செய்கை உற்பத்திக் கிராமம் அங்குரார்ப்பணம்




(சாவகச்சேரி நிருபர்)

சௌபாக்கியா திட்டத்தின் கீழ் முருங்கைச் செய்கை உற்பத்திக் கிராமம் யாழ்ப்பாணம், வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மண்கும்பான் கிராமத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன் கலந்து சிறப்பித்திருந்தார்.

உள்ளர் உற்பத்திகளை அதிகருத்தி, தொழிற்துறைகளை நம்பி வாழும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தல், வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தல், நாட்டின் பொருளாதார விருத்திக்கு கிராமிய மக்களின் பங்களிப்பை அதிகரித்தல் உள்ளிட்ட நோக்கங்களுக்காக இந்த உற்பத்திக் கிராமங்கள் தேசிய ரீதியில் உருவாக்கப்படுகின்றது.

நாடளாவிய ரீதியில் 500 சௌபாக்கியா உற்பத்திக் கிராமங்களை உருவாக்கும் தேசிய திட்டத்தின் கீழ், யாழ் மாவட்டத்தில் தலா ஒரு கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் 16 உற்பத்திக் கிராமங்கள் அங்குரார்ப்பணம் செய்துவைக்க திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



அநுராதபுர மாவட்டத்தின் 74 ஆவது புதிய அரசாங்க அதிபராக ஜனக ஜயசுந்தர பொது நிர்வாக அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது கடமைகளை அநுராதபுரம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பொறுப்பேற்றுக்கொண்டார். (படம் :- அநுராதபுரம் நிருபர்)

# காங்கேசன்துறை நபரொருவர் அடித்துக் கொலை

காங்கேசன்துறை பிரதேசத்தில் நபரொருவர் தலையில் தாக்கி கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திலிருந்து 50 மீற்றர் தொலைவில் வீதியோரத்தில் சுயநினைவின்றி வீதியிலிருந்து ஒருவர் மீட்கப்பட்டிருந்தார். அதனையடுத்து அவர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்தில் அவரது மோட்டார் சைக்கிள் வீதியில் தரித்து நின்றுள்ளது. சம்பவத்தில் நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்த ம.ஜெனுசன் (வயது-24) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்துச் சம்பவத்தையடுத்து அங்கு திரண்ட உறவினர்கள் அவர் கொலை செய்யப் பட்டுள்ளதாக தெரிவித்தனர். கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இறுதிக் கிரியை வீடொன்றில் சிலருடன் அவர் முரண்பட்டுக் கொண்டார் என்றும் அவர்களே கொலை செய்துள்ளனர் என்றும் உறவினர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

அதனடிப்படையில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் சம்பவ இடத்துக்கு அண்மையிலுள்ள கட்டடத் தொகுதியில் பெறப்பட்ட சி.சி.ரி.வி பதிவின் அடிப்படையில் மடத்தல் (பெரிய சுத்தியல்) உடன் பயணித்த நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவர் வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# கனலி சஞ்சிகை வெளியீடு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடகக் கற்கை துறை மாணவர்களின் 'கனலி சஞ்சிகை வெளியீட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை நிகழ்நிலையினூடாக இடம்பெற்றது.

மாணவர் சஞ்சிகையை பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா வெளியிட்டு வைத்தார். ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் கலாநிதி சி.ரகுராம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலைப்பீடப் பீடாதிபதி கலாநிதி க.சுதாகர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

வரவேற்புரையை மாணவி அ.சங்கீர்த்தனாவும், வழிகாட்டுநர் உரையை ஊடகக் கற்கைகள் துறை விரிவுரையாளர் அனுதர்ஷி கபிலனும் நன்றியுரையை மாணவி அ.ரோகிணியும் நிகழ்த்தினர்.

பெருந்தொற்றுக் கால சுகாதார விதி முறைகளைப் பின்பற்றி நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் நிகழ்நிலை இணைப் பினூடாகக் கலந்துகொண்டனர்.

# பல்கலைக்கழக நூலகர் அமைப்பின் சர்வதேச ஆய்வு மாநாடு புதனன்று

இலங்கை பல்கலைக்கழக நூலகர் அமைப்பு தனது வருடாந்த ஆராய்ச்சி மாநாட்டை நாளை மறுதினம் (22) இணைய வழியாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி வெளிப்பாட்டினை அதிகரிப் பதற்கான திறந்த பெறுகையும் ஆய்வு வெளியீடும் எனும் தொனிப்பொருளில் இந்த மாநாடு இடம்பெறவுள்ளது.

சமகால நிலையில் நூலக மற்றும் தகவல் விஞ்ஞானம் எனும் துறையிலுள்ள கல்வியியலாளர்களின் ஆய்வு வெளியீட்டை அதிகரித்தலில் கல்விசார் வெளியீடு மற்றும் திறந்த பெறுகை தொடர்பாக எழுகின்ற பிரச்சினைகள், தீர்வுகள் சம்பந்தமாக விவாதித்தல் - கலந்துரையாடல் மற்றும் அறிவைப் பகிர்தல் என்பனவற்றுக்கு ஒரு தளமமைத்தல் இம்மாநாட்டின் நோக்கமாகும்.

மாநாட்டின் தலைவரும் இலங்கை பல்கலைக்கழக நூலகர் அமைப்பின் தலைவருமான கலாநிதி சம்மிக மல்லவராச்சி கூறுகையில், தனிநபர் ஆராய்ச்சி, நிறுவனங்களின் ஆராய்ச்சி மற்றும் இந்த முழுநாட்டினதும் ஆராய்ச்சி வெளியீடுகளை மேன்மைப்படுத்துவதில் நூலகங்கள் முக்கிய பங்களிப்புக்களை வழங்கியுள்ளன என்றார்.

கல்விசார் வெளியீடு என்பது விஞ்ஞான மற்றும் அறிவுடைச் சமூகங்களுக்கிடையில் ஆய்வுத் தகவல்களை பரிமாறிக் கொள்கின்ற ஒரு வழிமுறை எனலாம். பொருத்தமானதும் தரமானதுமான தகவல்களை இலவசமாகப் பெற்று ஆய்வாளர்களுக்கு உதவி செய்வதில் கல்விசார் வெளியீடுகளின் உள்ளடக்கம் இருக்கின்றது என்பது இன்றைய உலகின் பொதுநிலையாகும் என்றார்.

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தரான மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். நூலக நிறுவனங்களின் சர்வதேச கூட்டமைப்பின் தலைவரான திருமதி பார்பரா லிஸ்சன், மனிதநேய விவகார நிலையத்தின் தலைவரான ஜீவன் தியாகராஜா மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி பிரதீபா விஜயதுங்க என்போர் ஆய்வரங்க பிரதான உரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட உதவி நூலகரும் ஆய்வரங்க செயலாளருமான கலாநிதி முகமட் மஜீத் மஷ்றூபா, நூலக மற்றும் தகவல் விஞ்ஞானம் சார் உள்நாட்டு மற்றும் சர்வதேச ஆய்வாளர்கள் தமது ஆராய்ச்சி முடிவுகளை இணைய வழியில் முன்வைப்பார்கள் எனக் கூறியுள்ளார்.

அனைத்து ஆய்வுக் கட்டுரைகளினதும் விரிவான ஆய்வுச் சுருக்கம் இலத்திரனியல் மற்றும் அச்சுமுறை தொகுப்புக்களாக வெளியிடப்படும். அத்துடன், ஆய்வு மாநாட்டின் முழுவெற்றியும் பின்வருவோரது பங்களிப்பிலும் தங்கியுள்ளது என்றார்.

ஏ.டி.பி. குமார, இணையதள மற்றும் தொழில்நுட்ப இணைத்தலைவர் - கே.எச்.ரி. அபேசேகர, வெளியீடுசார் இணைத் தலைவர் - கலாநிதி சமன் இலங்கரத்ன, அனுசரணையாளர் சார் இணைத்தலைவர் - கலாநிதி ஆனந்த திஸ்ஸ, நிதிசார் இணைத் தலைவர் - கலாநிதி ஆனந்த திஸ்ஸ, மாநாட்டின் இணைச் செயலாளர்களான - வெ.அழகரெத்தினம் மற்றும் மஞ்சுளா ராஜபக்ஷ, ஆலோசகர் குழு அங்கத்தவர்கள், இலங்கை பல்கலைக்கழக நூலகர் அமைப்பின் நிர்வாகசபை உறுப்பினர்கள், உபகுழுக்களின் அங்கத்தவர்கள் என்போராவார்.

# அநுராதபுர சிறைச்சாலை சம்பவம் இலங்கைக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் செயல் - இராதா எம்.பி

(க.கிஷாந்தன்)

ஜெனீவா மாநாடு நடைபெறுகின்ற இன்றைய சூழ்நிலையில் அநுராதபுர சிறைச்சாலை சம்பவம் கண்டிக்கத்தக்கதும் அதேநேரத்தில் இலங்கைக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் செயல் எனவும் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மேலும், இவ் விடயம் தொடர்பாக அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஹட்டனில் நேற்று(19) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் கைதிகள் தொடர்பாக தீர்மானம் ஒன்றை எடுக்கும் வகையில் ஜனாதிபதி ஆலோசனை குழுவை நியமித்து அவர்களின் பரிந்துரைகளை கோரியுள்ள நிலையில் அண்மையில் அநுராதபுர சிறைச்சாலையில் நடைபெற்ற இந்தச் சம்பவம் அரசியல் கைதிகளை அச்சுறுத்தலுக்குள்ளாக்கி இருப்பதோடு, இவர் களின் விடயம் தொடர்பாக அரசாங்கம் அரசியல் காய் நகர்த்தலையே செய்கின்றது.

ஜெனீவா மாநாடு நெருங்குகின்ற சூழ்நிலையில்



ஜனாதிபதி அமைத்துள்ள ஆலோசனை குழு கேள்விக்குரியாகியுள்ளது. குறித்த விடயத்தில் அரசாங்கம் அரசியல் கைதிகளின் கோரிக்கையான அநுராதபுர சிறைச்சாலைகளிலிருந்து யாழ்ப்பாண சிறைச்சாலைக்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை உடனடியாக பரிசீலனை செய்து அதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மத வழிபாடுகளுக்கும், அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் தடை விதித்திருக்கும் அரசாங்கம், மதுபானசாலைகளை திறந்து வைத்திருப்பது கேலிக்கூத்தான ஒரு செயல். இதன்மூலம் மக்களின் பொருளாதார நிலை மேலும் பாதிக்கப்பட்டு குடும்பங்களில் தேவையற்ற பிரச்சினை உருவாகுவதற்கு அரசாங்கமே அங்கீகாரம் வழங்கியுள்ளதா?

2000 ரூபா கொடுப்பனவு சரியான வகையில் மலையக மக்களுக்கு கிடைக்காத சூழ்நிலையில், மதுபானசாலைகளை திறந்து மேலும் அவர்களை பொருளாதார சிக்கலுக்குள் தள்ளிவிட்டிருக்கின்றது.

சீனாவுடன் நல்லுறவை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக சீனாவின் குப்பைகளை இலங்கைக்கு கொண்டு வந்து கொட்டுவதற்கு அனுமதிக்க முடியாது. சீனாவிலிருந்து இறக்குமதி செய் யப்பட்டுள்ள பசளையானது இலங்கை மண்ணுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என கருத்து வெளியாகியிருக்கும் சூழ்நிடலையில், அதனை விவசாயிகள் எவ்வாறு பாவிப்பது. எனவே இதற்கு எதிராக விவசாயிகள் குரல் கொடுக்க முன்வர வேண்டும். நானும் ஒரு விவசாயி என்ற அடிப்படையில் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசாங்கம் விவசாயம் தொடர்பாக தீர்மானங்களை நிறைவேற்றுகின்றபோது அது தொடர்பாக விவசாய திணைக்களம், விவசாயிகள் அனைவருடனும் கலந்தாலோசித்து சரியான தீர்மானங்களை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் எதிர்வரும் காலத்தில் இலங்கையில் உணவுப் பஞ்சம் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# தீவிரவாதிகளின் அடைக்கலமாகிப்போன பாகிஸ்தானின் அவலம்



## பாகிஸ்தான் ... !

இந்தப் பெயரைக் கேட்டதும் நமக்கெல்லாம் நினைவுக்கு வருவதென்ன? சிந்து நதியா? லாகூர் கோட்டையா? ஆசியாவின் சுவிட்ஸர்லாந்து என வர்ணிக்கப்படும் அளவிற்கு அங்கிருக்கும் இயற்கை வளங்களா? அல்லது அந்நாட்டினது சுவையான உணவுவகைகளா? நிச்சயமாக இவை எதுவுமே நம் நினைவில் வந்திருக்கப்போவதில்லை. ஏனெனில் சர்வதேச அளவில் பாகிஸ்தான் என்றாலே முதலில் நினைவுக்கு வருவது ஒன்றே ஒன்றுதான், அது தீவிரவாதம் !

ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் போதிக்கும் ஓர் மதத்தினை பின்பற்றும் நாடு. பாகிஸ்தான் என்கிறபோதிலும் அது தீவிரவாதத்திற்கு உதவுவதனை நிறுத்தியாகவேண்டும் என்கிற சர்வதேச அழுத்தத்தினை அவ்வப்போது சந்தித்துக்கொண்டுதான் இருக்கின்றது, பல சிறப்புக்களை கொண்ட நாடு என்கிறபோதிலும் தீவிரவாதத்திற்கு அடையாளம் என்கிற அளவிற்கு அந்நாடு மாறிப்போயுள்ளதன் பின்னணி என்ன? பாகிஸ்தானியர்கள் தீவிரவாதத்தினை ஆதரிக்கும் மனநிலையில் இருக்கின்றார்களா? நமக்கு, பாகிஸ்தான் பற்றி சொல்லப்படும் அல்லது காட்டப்படும் தகவல்கள் மட்டும்தான் பாகிஸ்தானா? அவை முற்றிலும் உண்மையா? அந்நாட்டினைப்பற்றியும், அதன் வரலாற்றினைப்பற்றியும் புரிந்துகொள்ள இப்படி அடுக்கடுக்கான கேள்விகளை ஏற்படுத்தி அவற்றுக்கான பதில்களை தேடுவது அவசியமாகின்றது.

அந்தவகையில் தற்போதுள்ள முக்கியமான கேள்வி தீவிரவாதத்தின் புகலிடமாக பாகிஸ்தான் மாறியது எப்படி என்பதுதான்! அபோதாபாத் (abbottabad) பாகிஸ்தானில் உள்ள பெரிய நகரங்களில் ஒன்று . 2011வரை உலகில் உள்ள பலருக்கு அப்படியொரு நகரம் இருப்பது பற்றியே தெரிந்திருக்கவில்லை. அந்த ஆண்டு மே 02ஆம் திகதி உலக நாடுகளின் தலைப்புச் செய்தியாக மாறியது அந்நகரம். ஆம், அங்குதான் அமெரிக்கப் படையினரால் ஒசாமா பின்லேடன் சுட்டுக்கொல்லப்பட்டார். ஒசாமா கொல்லப்பட்டது பற்றி அமெரிக்கப் படையினர் மற்றும் அதிகாரிகள் பின்னாளில் பேட்டிகள் கொடுத்தபோது, அவர்கள் அனைவரும் ஒருமித்துக்கூறியது பின்லேடனை கொல்லும் திட்டம் பற்றி பாகிஸ்தான் அரசிடமோ, பாகிஸ்தான் இராணுவத்தினரிடமோ முன்னரே தெரிவித்திருக்கவில்லை என்பதே. ஒரு நாட்டுக்குள், மற்றொரு நாட்டின் படை புகுந்து தீவிரவாதியை பிடிக்கத் திட்டமிட்டு அது அந்நாட்டுக்கு தெரியாமலேயே அரங்கேற்றப்பட்டது. அதற்கு காரணம் பாகிஸ்தான் இராணுவத்தில் இருந்த சிலருக்கு ஒசாமா தலைமறைவாகி இருந்த இடம் தெரிந்தேயிருந்தது என அமெரிக்கா உறுதியாக இருந்தமையே. ஒசாமா தங்கியிருந்த கட்டிடத்தின் காம்பவுண்ட் சுவர் பாகிஸ்தான் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த ஓர் பகுதி. அந்தப் பகுதியில் பறவைகள் பறந்தால்கூட அது நிச்சயம் இராணுவத்தின் கவனத்திற்கு சென்றுவிடும், அப்படியிருக்க, உலகை அச்சுறுத்திய ஓர் தீவிரவாதி தனது மனைவிகள், குழந்தைகளுடன் பாதுகாப்பாக பதுங்கியிருக்கும் வகையில் ஒரு வீடு இருப்பது பாகிஸ்தான் இராணுவத்துக்கு தெரிந்திருக்காமலா இருக்கும் என்பது அமெரிக்காவின் ஆதங்கம். ஒசாமா கொல்லப்படுவதற்கு முன்பே அவர் பாகிஸ்தானில் தலைமறைவாகியிருப்பது பற்றிய தகவல்கள் வெளியாகியிருந்தன. ஆனாலும் பின்லேடனை தேடும் அமெரிக்காவின் திட்டம் ஒவ்வொரு முறையும் தோல்வியில் முடிந்தன. ஏனெனில், ஒவ்வொருமுறையும் அமெரிக்கா பாகிஸ்தான் அரசிடம் தகவல் அளித்துவிட்டே பின்லேடனை தேடும் பணியில் ஈடுபட்டது, அந்த தகவல்கள் எப்படியோ பாகிஸ்தான் இராணுவத்தில் உள்ள சிலரால் லேடனின் காதுகளுக்குள் கசிந்துகொண்டேயிருந்தது. ஏற்கனவே பல தீவிரவாதிகளுக்கு பாக். தஞ்சமளித்திருப்பதாக இருந்த குற்றச்சாட்டு, லேடனின் வேட்டைக்குப்பின் கிட்டத்தட்ட உறுதிசெய்யப்பட்டன. அதுமட்டுமன்றி பின்லேடனை கண்டறியும் முயற்சியில் அமெரிக்காவிற்கு பெரிதும் உதவியவர் பாகிஸ்தானை சேர்ந்த மருத்துவர் ஷாகில் அப்ரிடி (shaakil afridi). ஆனால் இன்று அவர் பாகிஸ்தான் சிறையில் இருக்க அவரது குடும்பம் பாகிஸ்தான் இராணுவத்தின் மிகப்பெரிய அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளது. பின்லேடன் கொல்லப்பட்ட இருபதாம் நாள் மருத்துவர் ஷாகில் அப்ரிடி "Lashkar -e- islam " என்கிற தீவிரவாத இயக்கத்திற்கு உதவியதாகவும் காயமடைந்த தீவிரவாதிகளுக்கு அவர் சிகிச்சை அளிப்பதாகவும் அரச மருத்துவமனையில் அந்த இயக்கத்தினர் தமது கூட்டங்களை நடத்த இடமளித்ததாகவும் அவர்மீது குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார். (ஆனால் உண்மையான காரணம் அவர் ஒசாமா இருந்த இடத்தினை காட்டிக்கொடுத்து தேசத்துரோகம் செய்துவிட்டார் என்ற எண்ணமே) எந்தவித ஆதாரமுமின்றி அக்குற்றச்சாட்டின் அடிப்படையில் ஷாகிலுக்கு முப்பத்தைந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் அது இருபத்தைந்து ஆண்டுகளாக குறைக்கப்பட்டது. அப்ரிடி மட்டுமன்றி ஒசாமா கொல்லப்பட்டதன்பின் வேறு பலர் மீதும் பாகிஸ்தான் அரசு நடவடிக்கை எடுத்தது. அவர்கள் அனைவரும் அமெரிக்காவின் திட்டத்திற்கு ஏதோ ஒருவகையில் உதவியவர்கள். வேறுவேறு வழக்குகளின் பேரில் அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். உலகை அச்சுறுத்திய ஓர் தீவிரவாத இயக்கத்தின் தலைவரை பாகிஸ்தான் ஏன் இவ்வளவு சிரத்தையுடன் பாதுகாக்க நினைத்தது? எனினும், இதில் பாகிஸ்தான் அரசின் நேரடி ஆதரவு இருக்கிறதா என்பது குறித்து இன்றளவிலும் சரியான விடை கிடைக்கவில்லை என்பதையும் நாம் மனதில் கொள்ளவேண்டும்.

ஆனால் பாகிஸ்தான் அரசின் அதிகாரிகள், இராணுவத்தில் இருப்பவர்கள், உளவுத்துறையான ISI அதிகாரிகள் போன்றோர் தீவிரவாத அமைப்புகளுக்கு ஆதரவாக இருப்பது வெளிப்படையான ஒன்று. அதற்கு காரணம் என்ன? பாகிஸ்தானின் அதிகமான மக்கள் தொகை, வேலையில்லாத் திண்டாட்டம், வருமான ஏற்றத்தாழ்வுகள் மற்றும் இன / சமூக ரீதியிலான ஏற்றத்தாழ்வுகள், பணவீக்கம், அரசியல் ஸ்திரமின்மை மற்றும் சட்ட ஒழுங்குகள், நீதித்துறையின் அசிரத்தை என பல காரணங்களை அடுக்கிக்கொண்டே சென்றாலும், இதுபற்றி முழுமையாக தெரிந்துகொள்ள பாகிஸ்தான் உருவான வரலாறு பற்றி நாம் சற்று அறிந்துகொள்ள வேண்டும்.

1947 ஆகஸ்ட் 14 இந்தியாவிடமிருந்து பிரிந்து சுதந்திர தனிநாடாகியது பாகிஸ்தான் முகம்மது அலி ஜின்னா தலைமையில். ஜனநாயகவாதியான ஜின்னா, மதம் உட்பட வேறு எந்தவித வேறுபாடுமின்றி பாகிஸ்தான் உருவாக வேண்டும் என நினைத்தார். ஆனால், சுதந்திரம் பெற்ற அடுத்த ஆண்டே பலுகிஸ்தான்மீது படையெடுத்தது பாகிஸ்தான். தங்கம், கனிமம் என இயற்கை வளங்கள் நிறைந்திருந்த அந்தப் பகுதியை தன்னுடன் இணைத்துக்கொள்ள முயன்றது பாக். அந்தப் பகுதியை ஆக்கிரமிப்பதற்கு ஜின்னா கட்டாயத்தின்பேரில் ஒப்புக்கொண்டார். மேலும் வளங்கள் நிறைந்த பகுதியாக இருந்தபோதிலும் தொடர்ந்தும் வறுமையின் கோரப்பிடியில் இருந்த சிந்து பகுதியிலிருந்தும் "சுதந்திர சிந்து" போராட்டங்கள் தொடர்ந்தன. இப்படி உள்நாட்டில் பாகிஸ்தான் அரசுக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் மெல்ல மெல்ல உருவாகத் தொடங்கினர்.

அதுமட்டுமன்றி பாகிஸ்தானின் தற்போதைய நிலைக்கு மேலும் முக்கிய காரணம் அமெரிக்கா. பிரிட்டனின் காலணி ஆதிக்கம் முடிந்த சில ஆண்டுகளிலேயே அங்கு அமெரிக்க காலனிய ஆட்சி ஆரம்பித்ததென்று சொன்னால் அது மிகையில்லை . ஏனெனில், வணிக ரீதியில் அமெரிக்கா பாகிஸ்தானின் மீது தனது ஆதிக்கத்தை மெல்லமெல்ல கட்டவிழ்க்கத் தொடங்கியிருந்தது. இது குறுகியகாலத்திற்கு பாகிஸ்தானியர்களுக்கு நன்மையளிப்பது போல இருந்திருந்தாலும் நீண்டகாலநோக்கில் பாகிஸ்தானில் மிகப்பெரிய பாதிப்பை உள்நாட்டு உற்பத்தி மற்றும் வணிகத்தில் ஏற்படுத்தியது. போதாக்குறைக்கு இந்தியாவின் அனுசரணையுடன் 1971ஆம் ஆண்டு வங்கதேசம் பாகிஸ்தானில் இருந்து வெளியேறி தனிநாடாகியது. இந்த குளறுபடிகளால் எழுபதுகளின் மத்தியில் பாகிஸ்தான் பெரும் பொருளாதார சரிவை எதிர்கொள்ளவே நிதியுதவி வழங்கும் சாக்கில் மேலும் தன் ஆதிக்கத்தினை நிலைநாட்டியது அமெரிக்கா. உதவி செய்து அமெரிக்கா செய்த காரியங்கள் மிகவும் தந்திரமானவை. பாகிஸ்தானில் உள்ள அடிப்படைவாதிகளை திரட்டி சோவியத் யூனியனுக்கு எதிரான குழுக்களை உருவாக்கியது அமெரிக்கா. அமெரிக்காவின் CIA பாகிஸ்தானை ஜிகாதிகளை உருவாக்கும் பண்ணையாகத்தான் பார்த்தது என்றாலும் தகும். 1978ஆம் ஆண்டு பாகிஸ்தானின் அண்டை நாடான ஆப்கானிஸ்தானுடன் பாகிஸ்தானிற்கு மோதல் ஏற்பட சோவியத்தின் உதவி பெற்ற ஆப்கானிஸ்தான் இடதுசாரி அரசுக்கும் அமெரிக்க உதவிபெற்ற முஜாஹிதீன் என்கிற கிளர்ச்சியாளர் குழுவுக்குமிடையே மோதல் வெடித்தது. உண்மையில் அது ரஷ்ய அமெரிக்கப் போர். கிட்டத்தட்ட ஒன்பது ஆண்டுகள் நடந்த இப்போரில், சுமார் பதினைந்து இலட்சம்பேர் உயிரிழக்க, பலர் பாகிஸ்தான் மற்றும் ஈரானுக்கு அகதிகளாக இடம்பெயர்ந்தனர். ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியனுக்கு எதிராக போராடிய பல வீரர்கள், பின்னாளில் தத்தமது தாயகம் திரும்பியதும் அடிப்படைவாதிகளாக மாறினர். அவர்களால் உருவாக்கப்பட்ட அடிப்படைவாதக் குழுக்கள் காலப்போக்கில் தீவிரவாத குழுக்களாக உருப்பெற்றன. மேலும் ஆப்கானிஸ்தானிலேயே தங்கிவிட்ட வீரர்களை ஒன்றிணைத்து "அல்கொய்தா" எனும் இயக்கத்தினை உருவாக்கினார் ஒசாமா பின்லாடன்.

பாகிஸ்தானின் அடுத்த ஆயுதம் காஷ்மீர். 1987ஆம் ஆண்டு காஷ்மீரில் தேர்தல் நடைபெற்றது. இதனால் பாகிஸ்தானின் அடிப்படைவாதிகள் ஆத்திரமடைந்தனர். அதனைப் பயன்படுத்திக்கொண்ட அந்நாட்டு அரசு அவர்களை சுதந்திரப் போராட்ட வீரர்களாக சித்தரித்தது. காஷ்மீர் பள்ளத்தாக்கில் பெரிய அளவிலான தாக்குதல்களை பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்தினர். இதனால் காஷ்மீர் பண்டிதர்கள் சுமார் மூன்று லட்சத்துக்கும் அதிகமானோர் டெல்லி, ஜம்பு காஷ்மீர் பகுதிகளுக்கு இடம்பெயரவே, இதன் தொடர்ச்சியாக ஜிகாதிகளின் புகலிடமாக பாகிஸ்தான் மாறியது. அவர்களுக்கு CIA மற்றும் பாகிஸ்தானின் உளவுத்துறையான ISAயிடமிருந்து நிதி மற்றும் ஆலோசனைகள் என உதவிகள் வழங்கப்பட்டன. தொடர்ந்த நிதியுதவிகள் மூலமாக அமெரிக்காவும் பாகிஸ்தானை அதன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டது. பாகிஸ்தானும் கிடைத்த நிதிகளையெல்லாம் நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்தாது, நாடு முழுவதிலும் இராணுவ தளங்களை அமைப்பதிலும் ஆயுதங்களை வாங்குவதிலும் செலவிட்டது. நாட்டின் வளர்ச்சியைவிட இராணுவத்தில் பெருமளவில் நிதியை பாகிஸ்தான் செலவிட காரணம் அந்நாட்டின் ஆட்சியாளர்கள்தான் என்றால் அது மிகையில்லை. நவாப் ஷெரீப்பின் ஆட்சியின்போது மூண்ட கார்கில் போரில் பாகிஸ்தான் தோல்வியுறவே, இராணுவ கிளர்ச்சியின்மூலம் நாட்டை தன் கட்டுக்குள் கொண்டுவந்தார் பர்வேஷ் முஷாரப். முஷாரபின் ஆட்சியின்போதுதான் அமெரிக்காவில் இரட்டைக்கோபுரத் தாக்குதல் இடம்பெற்றது. அல்கொய்தா தீவிரவாதிகளினால் அத்தாக்குதல் நடத்தப்படவே, அவ்வியக்கத்தினை தடைசெய்து நாட்டைவிட்டு அப்புறப்படுத்த தலிபான் அரசினைக்கோரியது அமெரிக்கா. இதற்கு தலிபான் சம்மதிக்காததால், தலிபான் மீதும் அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. பின்னர் தீவிரவாதத்திற்கு எதிரான போரின்படி அமெரிக்கா வலியுறுத்திய அனைத்துக்கும் தலையசைத்தது பாகிஸ்தான். எனினும் ஒசாமா உள்நாட்டில் பதுங்கியிருந்தது குறித்து தாம் அறிந்திருக்கவில்லை என்பதை ஒப்புக்கொள்ளாத அமெரிக்கா அந்நாட்டுக்கு வழங்கிவந்த உதவிகள் அனைத்தையும் படிப்படியாக குறைத்துக்கொள்ள தொடங்கியது.

அதன் விளைவாக தற்போது சீனாவின் செல்லப்பிள்ளையாக பாகிஸ்தான் இயங்கிவருகிறது. சீனா கொடுத்த ஆதரவில்தான், ஒசாமாவின் மரணத்தை வீர மரணம் என குறிப்பிட்டார் இம்ரான்கான்.

பிரிட்டனின் கையிலிருந்து அமெரிக்கா, அமெரிக்காவின் கையிலிருந்து சீனா என அடுத்தடுத்து மற்றொரு நாட்டினை நம்பியே இருக்கும் நிலையில்தான் பாகிஸ்தான் இருக்கின்றது என்பதே யதார்த்தம். ஒருவிதத்தில் பாகிஸ்தானின் பொருளாதாரமும் சட்ட ஒழுங்கும் இறங்குமுகத்தில் இருக்க, ஆப்கானிஸ்தானின் முஜாஹிதீன்கள், அல்கொய்தா, Lashkar-taiba, Lashkar-omar, jaish-e-Mohammed, sipah-e-sahaba, jais ul-adl, al base mujaahideen, harkat up mujaahideen, isis - kp போன்ற தீவிரவாதிகளின் கட்டுக்குள் சிக்குண்டது பாகிஸ்தான். குறிப்பாக 2008 இல் மும்பைத்தாக்குதலின் மூளையாக செயல்பட்டு சர்வதேச தீவிரவாதிகளின் பட்டியலில் இடம்பெற்றுள்ள தாவுத் இப்ராஹிம் இன்றுவரையில் அடைக்கலமாக கொண்டிருப்பது பாகிஸ்தானையே . பாகிஸ்தானின் முன்னாள் கிரிக்கட் வீரரான ஜாவித் அலியின் மகனை தாவூத்தின் மகள் திருமணம் செய்துகொள்ளும் அளவிற்கு சுதந்திரமானவராகவே தாவுத் பாகிஸ்தானில் உலவுகின்றார் . ஏனெனில் தாவூத் மூலமாக பல உதவிகள் கிடைப்பதால், பாகிஸ்தான் அவருக்கு ஆதரவளிப்பதாக கூறப்படுகின்றது . மேலும் Lashkar-e-taiba இயக்கத்தினை நிறுவிய தேசிமுmuhammad Saeed , jaish-e-Mohammed இயக்கத்தினை தலைவர் Masood ashar போன்றோரும் பாகிஸ்தானிலேயே வாழ்ந்துவருகின்றனர் என்பதனையும் இங்கே குறிப்பிட்டேயாக வேண்டும் . இவர்களுக்கெல்லாம் பாகிஸ்தான் அடைக்கலம் கொடுத்துள்ளது எனக்கூறுவதைவிட , அவர்கள் பாகிஸ்தானை தமது இருப்பிடமாக தேர்ந்தெடுத்துக்கொண்டுள்ளனர் எனக்கூறுவதே சாலப்பொருந்தும். ஏனெனில் பாகிஸ்தானின் நிலை தற்போது அதுதான். பாகிஸ்தான் மட்டுமல்ல, சர்வதேச அளவில் பல நாடுகள் தீவிரவாதத்திற்கு பல வழிகளிலும் உதவியே வருகின்றன. ஆனால் பாகிஸ்தானை போல வேறெந்த நாடும் தீவிரவாதிகளுக்கான ஆதரவினையோ, பாதுகாப்பினையோ வெளிப்படையாக வழங்கவில்லை.

இப்படி பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு உதவுவதனை சர்வதேச தீவிரவாதத்தினை கண்காணிக்கும் அமைப்பு வெளிப்படையாக அறிவிக்குமேயானால் உலக வங்கி உள்ளிட்டவையிடமிருந்து பாகிஸ்தானுக்கு நிதியுதவிகள் கிடைப்பதில் சிக்கல்கள் ஏற்படும். இதனால் ஏற்கனவே கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள அந்நாட்டின் பொருளாதாரம் இன்னும் மோசமடையும். பாகிஸ்தானின் இந்த இக்கட்டான நிலைக்கு காரணம் அந்நாட்டின் முடிவுகளை எடுக்கும் அதிகாரம் யாரிடம் இருக்கின்றது என்பது இன்றளவிலும் புரியாத புதிராகவே உள்ளது. ஆட்சியில் இருப்பவர்களா? இராணுவமா? அந்நாட்டுக்கு உதவும் மற்றைய நாடுகளா? அல்லது அங்கே பதுங்கியிருக்கும் தீவிரவாத அமைப்புகளின் தலைவர்களா?

பாகிஸ்தான் உருவானதிலிருந்தே அங்கு அரசியல் அசாதாரண சூழல் என்பது நிலையானவொன்றாகவே இருந்து வருகின்றது. ஜின்னாவுக்கு பின்னே அங்கு உறுதியான தலைவர்கள் உருவாகவேயில்லை என்பதுதான் யதார்த்தம். அடுத்தடுத்து தீவிரக்கொள்கைகளை கொண்டவர்களை கடந்துவந்துகொண்டிருக்கும் ஓர் நாடுதான் அது. அதனால்தானோ என்னவோ கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்ளக்கூட பிறநாட்டு வீரர்கள் ஒப்புக்கொள்ளாத ஓர் நிலையில் பாகிஸ்தான் இன்றுள்ளது. பல ஆண்டுகளாக தீவிரவாதிகளுக்கு அந்நாடு கொடுத்துவரும் ஆதரவின் பலனாக, அந்த அமைப்புகள் நடத்தும் தாக்குதல்களினாலும், அந்த அமைப்புகளின்மீது மற்றைய நாடுகள் நிகழ்த்தும் தாக்குதல்களினாலும் பாகிஸ்தான் குடிமக்களுமே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, அந்நாட்டு மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காகவாவது பாகிஸ்தான் புதிய பயணத்தினை தொடங்க வேண்டும். அண்டை நாடுகளுடனான நட்புறவு, கல்வி, பொருளாதாரம் என அடுத்த கட்டத்தினை நோக்கி அது தன் நீண்ட நெடிய பயணத்தினை ஆரம்பிக்கவேண்டும் என பல நாடுகள் எதிர்பார்க்கின்றன. இந்த எதிர்பார்ப்புகள் பாகிஸ்தானில் சாத்தியப்படுமா? பொறுத்திருந்து பார்க்கலாம் ...



ஆக்கம்:-
ப்ரியா ராமநாதன்



# ஒரே வார்த்தையில் மண்ணான பாகிஸ்தானின் 18 வருட கனவு!



**அப்ரா அன்ஸார்**

பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகளுக்கிடையில் கடந்த வெள்ளிக்கிழமை ராவல்பிண்டியில் நடைபெறவிருந்த முதலாவது ஒருநாள் போட்டி ஆரம்பிக்க சிறிது நேரத்திற்கு முன்பு பாதுகாப்பு எச்சரிக்கை காரணமாக நியூசிலாந்து அணி தொடரை கைவிடுவதாக அறிவித்திருந்தது. அதன் பின்னர் சனிக்கிழமை நியூசிலாந்து அணி பாதுகாப்பாக நாடு திரும்பியது.



நியூசிலாந்து கிரிக்கெட் சபை அறிக்கை ஒன்றில், 'நியூசிலாந்து அரசாங்கத்தின் அச்சுறுத்தல் நிலைகள் அதிகரித்ததைத் தொடர்ந்து நியூசிலாந்து அணி சுற்றுப் பயணத்தை கைவிடுவதாக அறிவித்தது. நியூசிலாந்து அரசின் பாதுகாப்பு எச்சரிக்கையைத் தொடர்ந்து, நியூசிலாந்து கிரிக்கெட் அணி பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தை கைவிட்டுள்ளது.

நியூசிலாந்து கிரிக்கெட் தலைமை நிர்வாகி டேவிட் வையிட் கடைசி நிமிட முடிவை நியாயப்படுத்தியுள்ளார். அதாவது, தங்களது வீரர்களின் பாதுகாப்பு மிக முக்கியமானது என்றும் கூறியிருந்தார். இந்த நடவடிக்கை பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு முரணாக இருக்கும் என்பதை நான் உணர்ந்து கொள்கிறேன் என்றும் தெரிவித்தார்.

'நியூசிலாந்து கிரிக்கெட் எங்களுக்கு சில பாதுகாப்பு எச்சரிக்கைகள் குறித்து தெரிவித்ததாகவும், ஒரு தலைபட்சமாக தொடரை ஒத்தி வைக்க முடிவு செய்வதாகவும் எங்களுக்கு அறிவித்தது' என பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஊடக அறிக்கை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் இவ்விடயம் தொடர்பாக நேரடியாக தலையிட்டு நியூசிலாந்து வீரர்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதமளித்த போதும், நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டன் அதை புறக்கணித்தார். விளையாட்டு ஒழுங்கு முறைமையை மீறிய நியூசிலாந்தின் இச் செயலினை கிரிக்கெட் ஜாம்பவான்கள், கிரிக்கெட் அபிமானிகள், ஆர்வலர்கள், சமூக ஊடகங்களில் தங்களது கண்டனங்களையும், ஆதங்கத்தையும் தெரிவித்து வருகின்றனர்.

பாகிஸ்தான் - நியூசிலாந்து தொடர் இரத்துச் செய்யப்பட்டதற்கு பின்புலத்தில் இந்தியா கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை செயற்பட்டிருக்கலாம் என ஊகிக்க முடிகிறது. ஏனெனில் ஐ.பி.எல் மாபியாக்கள், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை, சர்வதேச கிரிக்கெட் பேரவையுடன் கொண்டுள்ள பிணைப்பு இத்தொடரை நிராகரித்துள்ளது. நியூசிலாந்து எடுத்த முடிவுக்கு இந்தியா கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை மற்றும் வீரர்கள் எந்த கருத்துகளையும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் அணி வீரர்கள் தங்களுடைய சமூக வலைத்தளங்களில் "பாகிஸ்தான் பாதுகாப்பு பலமிக்க நாடு என்றும், பாகிஸ்தான் ஸின்தாபாத்" என்ற பதிவுகளை தொடர்ந்து பதிவிட்டு வருவதை காணமுடிகின்றது. அத்தோடு இலங்கை டெஸ்ட் அணித் தலைவர் திமுத் கருணாரட்ன, மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் தலைவர் டேரன் சமி உட்பட கிரிக்கெட் உலகமே கொதித்தெழுந்துள்ளது.

தென்னாபிரிக்க அணியின் முன்னாள் ஜாம்பவான் ஹேர்ஷல் கிப்ஸ், இந்த நாள் கிரிக்கெட் உலகிற்கு "கருப்பு தினம்" என கடுமையாக தெரிவித்துள்ளார். மேற்கிந்திய தீவின் அதிரடி ஆட்டக்காரர் கிறிஸ் கெய்ல், "நான் நாளைக்கு பாகிஸ்தான் செல்லப் போகிறேன், யார் என்னுடன் வரப்போவது? என்று தனது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டு பாகிஸ்தானுக்கு ஆதரவு வழங்கியுள்ளார்.



2019ஆம் ஆண்டு நியூசிலாந்து க்ரைசேர்ச் நகரில் உள்ள பள்ளிவாசலில் துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட்டு 49 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இதனை தொடர்ந்து அந்த நாட்டு பாதுகாப்பு குறித்து விமர்சனங்கள் எழுந்திருந்தன. இந்த சம்பவத்தின் பின்னர் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அந்நாட்டுக்கு சுற்றுலா மேற்கொண்டது.

இதையெல்லாம் நியூசிலாந்து மிக எளிதாக மறந்து விட்டு இவ்வாறு பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கும், உலகளாவிய கிரிக்கெட் ரசிகர்களுக்கும் ஏற்படுத்திய ஏமாற்றம் எளிதில் மறக்க முடியாததாகும். நியூசிலாந்து அணியினர் பாகிஸ்தானுக்கு தரையிறங்கிய போது அந்நாட்டு பிரதமர் இம்ரான் கானுக்கு வழங்கப்படும் பாதுகாப்பினை விடவும் உயர் அடுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டு கடந்த ஆறு நாட்களில் பயிற்சிகளில் ஈடுபட்டதை சமூக வலைத்தளங்களில் காண முடிந்தது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ரமீஸ் ராஜா நியூசிலாந்து அணியை கடுமையாக விமர்சித்துள்ளார். "நியூசிலாந்து அணியின் முடிவு சிறுபிள்ளைதனமானது. வெறும் பாதுகாப்பு மிரட்டல் தொடர்பாக தொடரில் ஆடாமல் வெளியேறுவது எங்களுக்கும், ரசிகர்களுக்கும் ஏமாற்றமாக உள்ளது. நியூசிலாந்து தன்னிச்சையாக இந்த முடிவை அறிவித்துள்ளது. போட்டிகளின் போது பலத்த பாதுகாப்புக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஏற்பாடு செய்திருந்தது. எங்கள் பிரதமர் இம்ரான் கானும் இது தொடர்பாக நியூசிலாந்து அரசுடன் பேசினார். நியூசிலாந்து அணிக்கு பாதுகாப்பில் எந்த குறைபாடும் இல்லை என விளக்கினோம்" என தெரிவித்தார்.

இது தொடர்பில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந் துவீச்சாளர் சொயிப் அக்தர் தனது ட்விட்டர் பக்கத்தில் "நியூசிலாந்து, பாகிஸ்தான் கிரிக்கெட்டை கொன்று விட்டது" என மனவருத்தத்துடன் கடுமையான வார்த்தையை பதிவு செய்துள்ளார்.

அடுத்த மாதம் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ள இருபதுக்கு 20 தொடருக்கு தயாராகி வருகின்ற நிலையில் இவ்வாறு இடம்பெற்றிருப்பது பாகிஸ்தான் அணி வீரர்களை வலுவிழக்கச் செய்துள்ளது. பாகிஸ்தானில் கிரிக்கெட் போட்டிகள் இடம்பெறாவிடினும் பாகிஸ்தான் வீரர்கள் தங்களுடைய வெற்றியை நிலைநாட்டிக் கொண்டிருப்பதை மறுக்க முடியாது.

நியூசிலாந்துடனான கிரிக்கெட் தொடர்களை பாகிஸ்தான் புறக்கணிக்க வேண்டும் என பாகிஸ்தானிய மக்கள் தெரிவித்து வருவதாக பாகிஸ்தான் பிரஜையான லாஹூரை சேர்ந்த அஸீம் உமர் தெரிவித்தார். எங்கள் நாட்டுக்கு செய்த துரோகம் இது. அவர்களுடன் எந்த கிரிக்கெட் தொடரையும் பாகிஸ்தான் அணி விளையாடக் கூடாது என்றும், நியூசிலாந்து பள்ளிவாசல் தாக்குதலின் போது நியூசிலாந்து உளவுத்துறை அதிகாரிகள் எங்கே இருந்தார்கள் என்று மக்கள் கேள்வி எழுப்புவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தீவிரவாதம் என்பது பாகிஸ்தானில் மாத்திரமல்ல, முழு உலகிலும் இருக்கின்றது. குறிப்பிட்ட ஒரு நாட்டை மாத்திரம் இதற்காக சாடி விடமுடியாது. இந்த மன அழுத்தத்திலிருந்து பாகிஸ்தான் வீரர்கள் மேலெழுந்து வந்து எதிர்காலத்தில் எவ்வாறு விளையாடப் போகிறார்கள் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.



## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# இந்திய அணியின் அடுத்த பயிற்றுவிப்பாளர் யார்?

## மேலும் இருவரின் பெயர்கள்





இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக செயற்பட்டுவரும் ரவி சாஸ்திரியின் பதவிக்காலம் அடுத்த மாதம் நடைபெறுகின்ற ஐ.சி.சி இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருடன் நிறைவுக்குவரும் நிலையில், புதிய பயிற்றுவிப்பாளராக யார் நியமிக்கப்படுவார் என எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

முன்னாள் தலைவரான ராகுல் டிராவிட், பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. அவர் இந்திய ஏ மற்றும் 19 வயதுக்குட்பட்ட அணியின் பயிற்றுவிப்பாளராக சிறந்து விளங்கிய நிலையில், தேசிய கிரிக்கெட் அகடமியின் இயக்குனராகவும் செயற்பட்டு வருகிறார்.

இந்நிலையில் இந்திய அணியின் பயிற்றுவிப்பாளர் பதவிக்காக இந்திய அணியின் முன்னாள் தலைவர் அணில் கும்ப்ளே, முன்னாள் வீரர் வி.வி.எஸ். லக்ஸ்மன் ஆகியோரை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ.) அணுகலாம் என்ற தகவல் வெளியாகியுள்ளது. பயிற்றுவிப்பாளராக செயற்பட இருவரிடமும் பி.சி.சி.ஐ கேட்கவுள்ளதாக பி.சி.சி.ஐ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதில் அணில் கும்ப்ளே ஏற்கனவே இந்திய அணிக்கு பயிற்றுவிப்பாளராக இருந்துள்ளார். விராட் கோஹ்லியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடால் அவரால் பயிற்றுவிப்பாளர் பதவியில் நீடிக்க முடியவில்லை. வி.வி.எஸ். லக்ஸ்மன் கிரிக்கெட் ஆலோசனை குழுவில் உறுப்பினராக இருந்துள்ளார். இருவருமே சிறந்த கிரிக்கெட் அனுபவம் கொண்டவர்களாக காணப்படுகின்றனர்.

# இந்திய அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராவதை நிராகரித்த மஹேல



இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்த்தனவை நியமிக்க அழைப்பு மேற்கொள்ளப்பட்ட நிலையில், அவர் குறித்த அழைப்பை நிராகரித்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டுவரும் இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரில் ரோஹித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியை மஹேல ஜெயவர்த்தன வெற்றிகரமாக பயிற்றுவித்து வருகிறார். மஹேல ஜெயவர்த்தன ஒரு தேசிய அணிக்கு பயிற்றுவிப்பாளராக வருவதை விட, ஐ.பி.எல் தொடர் போன்ற அணி உரிமையாளர்கள் கொண்ட (பிரன்ச்சைஸ்) லீக் தொடர்களுக்கான அணிகளுக்கு பயிற்றுவிப்பதில் மட்டுமே ஆர்வம் காட்டுவதாக தெரிகிறது.

இந்திய அணியின் பயிற்றுவிப்பாளராக வந்தால் வேறு எந்த கிரிக்கெட் பொறுப்பையும் ஏற்க முடியாது. ஏனெனில் புதிய பி.சி.சி.ஐ விதிமுறைகளின் படி, எந்த ஒரு நபரும் ஒரே நேரத்தில் இரண்டு பதவிகளை வகிக்க பி.சி.சி.ஐ. அனுமதிக்காது.

அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.சி.சி இருபதுக்கு 20 உலகக்கிண்ண தொடரின் பின் தற்போதைய இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக செயற்பட்டுவரும் ரவி சாஸ்திரியின் பதவிக்காலம் முடிவடைகிறது. மேலும், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை இப்போது இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக ரவி சாஸ்திரியை மாற்றக்கூடிய நபரைத் தேடிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை வீரர்களின் திறமையை பாராட்டிய கோஹ்லி

14ஆவது இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரின் இரண்டாம் பாதி ஆட்டம் நேற்று ஆரம்பமானது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் இலங்கையை சேர்ந்த வனிந்து ஹஸரங்க மற்றும் துஸ்மந்த சமீர ஆகியோர் விராட் கோஹ்லி தலைமையிலான ஆர்.சி.பி அணியில் இடம்பெற்றுள்ள நிலையில், விராட் கோஹ்லி இருவரினதும் திறமையை பாராட்டி பேசியுள்ளார்.



விராட் கோஹ்லி தெரிவிக்கையில், இரண்டு வீரர்களும் ஆடுகள வைத்தவர்கள். தற்போதைய நிலைமைகள் ஒரே மாதிரியானவைதான். ஆகியோர் இலங்கையில் அதிகமான

இவ்வாறான ஆடுகளங்கள் எப்படி அவர்களுடைய திறன்கள் எமக்கு டுபாய் எவ்வளவு வெப்பமானது நிலைமைகளில் ஆடுகளங்கள் எப்படி

அணியில் தற்போது இணைக்கப்பட்டுள்ள தன்மையை நன்றாக அறிந்து காலப்பகுதியின் துணைக்கண்டத்தின் வனிந்து ஹஸரங்க மற்றும் துஷ்மந்த சமீர போட்டிகளில் விளையாடியுள்ளனர். செயற்படும் என அவர்கள் அறிவதுடன், மிகப்பெரிய உதவியாக இருக்கும். என்பதிலிருந்து, இவ்வாறான செயற்படும் என அனைத்தையும் அறிவர் என்றார்.